www.kalvisolai.com

## 1.வட இந்திய அரசுகள் இராசபுத்திரர்கள்

- உறர்சர் மற்றும் 2ம் புலிகேசியுடன் பண்டைய கால இந்திய வரலாறு முடிவடைகிறது.
- இராஜபுத்திரர்களின் ஆட்சி முதல் இந்தியாவின் இடைக்கால வரலாறு துவங்குகிறது.
- கி.பி.8ஆம் நூற்றாண்டு முதல் 18-ம் நூற்றாண்டு காலமே 'இடைக்காலம்' எனப்படுகிறது.
- கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 13 ஆம் நூற்றாண்டு வரை முந்தைய இடைக்காலம் கி.பி 13ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 18ஆம் நூற்றாண்டு வரை பிந்தைய இடைக்காலம் எனவும் அழைக்கப்படுகிறது.

**இராசபுத்திரர்கள் காலம் (கி.பி 647 கி.பி 1200)**

- **தோற்றம்** பல்வேறு அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்
  1. இராமன் (சூரிய குலம்) அல்லது கிருஷ்ணன் (சந்திர குலம்) வழி வந்தவர்கள்.
  2. பண்டைய சத்திரிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள்
  3. சாகர்கள் உறூனர்கள், குஷானர்கள், கூர்ஜரர்கள் போன்ற வெளிநாட்டு மரபினைச் சார்ந்தவர்கள்,
  4. அக்னி குலத்தவர்கள்
- 36 வகை இராஜபுத்திரர்கள் வட இந்தியாவில் ஆட்சி செய்தார்கள் அவர்களில் வலிமைப் பெற்றவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரதிகாரர்கள் | - | அவந்தி பகுதி |
| 2. | பாலர்கள் | - | வங்காளம் பகுதி |
| 3. | சௌகான்கள் | - | அஜ்மீர், டெல்லி பகுதி |
| 4. | தோமர்கள் | - | டெல்லி |
| 5. | ரத்தோர்கள் | - | கனோஜ் |
| 6. | சிசோதியர் அல்லது குகிலர்கள் | - | மேவார் |
| 7. | சந்தேலர்கள் | - | பந்தல்கண்ட் |
| 8. | பரமாரர்கள் | - | மாளவம் |
| 9. | சேனர்கள் | - | வங்காளம் |
| 10. | சோலங்கிகள் | - | குஜராத் |

  - இராஜபுத்திரர்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக்கொண்டு இருந்தனர். அதனால் வலிமையான எல்லைப்புற பாதுகாப்பினை பலபடுத்த தவறவிட்டனர். இதுவே பிற்காலத்தில் முஸ்லிம்களின் படையெடுப்பிற்கு வழிவகுத்தது.

1.**பிரதிகாரர்கள் (8-11 நூற்றாண்டு)**

- இவர்கள் கூர்ஜர பிரதிகாரர்கள் எனப்பட்டனர்.
- பிரதிகார மரபை தோற்றுவித்தவர் **முதலாம் நாகபட்டர்.**
- இவருக்குப்பின் வத்சராசா , இரண்டாம் நாகபட்டர் ஆட்சியமைத்தனர்.
- பிரதிகார மன்னர்களில் மிகவும் வலிமையுடன் விளங்கியவர் மிகிரபோசர் இவரது ஆட்சியில் பிரதிகார பேரரசு காஷ்மீர் முதல் நர்மதா வரையில் பரந்திருந்தது.
- சிந்துவின் **ஜீனட் முஸ்லிம்**களின் படையெடுப்பை முற்றிலும் தடுத்து நிறுத்தியவர் மிகிரபோசர் ஆவார்.
- இவருக்கு பின் இவரது மகன் மகேந்திரபாலர் (கி.பி.885-908) ஆட்சிக்கு வந்தார்.
- பிரதிகாரர்களின் **கடைசி அரசர் இராஜ்யபாலர்** கி.பி.1018-ல் **முகமது கஜினி**, இராஜ்யபாலர் மீது போர் தொடுத்து வென்று பிரதிகாரர்கள் மரபை முடிவுக்கு கொண்டு வந்தார்.
- இந்தியாவினை அந்நிய படையெடுப்பிலிருந்து காத்து ஒரு பாதுகாப்பு அரணாக இருந்தவர்கள் பிரதிகாரர்களே ஆவர்.

**2.பாலர்கள் (கி.பி 8-12 நூற்றாண்டு)**

- கி.பி 750 முதல் 760 வரையிலான காலத்தில் வங்காளத்தில் குழப்பமான சூழல் நிலவியது. இந்த சூழ்நிலையில்தான் '**கோபாலர் வங்காளம் மற்றும் பிகார்** போன்ற பகுதியை உள்ளடக்கிய **பாலர்கள் மரபை தொடங்கி வைத்தார்.**

- கோபாலருக்கு பின் அவரின் மகன் தருமபாலர் (கி.பி.769-815) இவர் பிரதிகாரர்களை வென்று **கனோஜ், வங்காளம், பீகார்** ஆகிய இடங்களை கைப்பற்றினார். இதன் மூலம் வடஇந்தியா முழுவதும் இவர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.
- புகழ்பெற்ற விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தை நிறுவியவர் தர்மபாலரே ஆவார். மேலும் குமாரகுப்தர் நிறுவிய நாளந்தா பல்கலைக் கழகத்தையும் இவர் புதுப்பித்தார்.
- இவருக்குப்பின் தேவபாலர் (கி.பி.815- 855) என்ற இவரது மகன் அறியனை ஏறினார். ஒரிஸா, அஸ்ஸாம், பகுதிகளை கைப்பற்றிறனார்.
- மகிபாலர் (கி.பி.998-1038) ஆட்சிக்கு பின் நாடு வலிமையை இழந்தது.
- பாலர் வம்சத்தின் கடைசி மன்னர் கோவிந்த பாலர் இவர்களுடைய வீழ்ச்சிக்கு பின் கி.பி.12ஆம் நூற்றாண்டுக்கு பின் வங்காளப் பகுதியில் சேனர்கள் எழுச்சி பெற்று புதிய ஆட்சியை ஏற்படுத்தினர்.

**கனோஜ் பகுதியை பெறவேண்டி மூன்று அரசுகளிடையே போராட்டம்**

அந்த மூன்று அரசுகள்

1.பிரதிகாரர்கள்

2.வங்காளத்து பாலர்கள்

3.தக்காணத்தை ஆட்சிசெய்த இராட்டிரகூடர்கள்

- இந்த 3 அரசுகளும் வளமிக்க கங்கைச் சமவெளிப்பகுதி மற்றும் கனோஜ் பகுதியை கைப்பற்ற வேண்டி ஒன்றுடன் தொடர்ந்து ஏறத்தாழ 200 ஆண்டுகள் போரிட்டன. இந்த போராட்டம் 3 அரசுகளையுமே வலிமையிழக்கச் செய்தது.

3.**டெல்லியை ஆண்ட தோமர்கள்**

- கனோஜ் பகுதியில் இருந்த பிரதிகாரர்களிடம் திறைசெலுத்திய அரச**ர்**களாக இருந்தவர்களே தோமர்கள் ஆவர்.
- டெல்லி நகரை கி.பி.736ல் நிறுவியவர்கள் தோமர்களே ஆவர்.
- கி.பி.12ஆம் நூற்றாண்டில் சௌகான்கள் வம்சத்தினர், டெல்லியை தோமர்களிடம் இருந்து கைப்பற்றினர்.

4.**டெல்லி, அஜ்மீர் பகுதியை ஆண்ட சௌகான்கள்**

- கி.பி. 11ஆம் நூற்றாண்டில் அஜ்மீர் பகுதியை சுதந்திர அரசாக சௌகான்கள் அறிவித்தனர்.
- பிறகு கி.பி.12ஆம் நூற்றாண்டில் மாளவத்தை ஆண்ட பரமாரர்களிடமிருந்து உஜ்ஜயினியையும், தோமரர்களிடமிருந்து டெல்லியையும் வென்றனர்.
- சௌகான் மன்னர்களில் முக்கியமானவர் பிரித்திவிராஜ் சௌகான்.

**5. கனோஜ் பகுதியை ஆண்ட ரத்தோர்கள் (கி.பி.1090-1194)**

- பிரதிகாரர்களின் வீழ்ச்சிக்குபின் கனோஜ் பகுதியை கைப்பற்றியவர்கள் **ரத்தோர்கள்** ஆவார்.
- ரத்தோர்கள் கி.பி.1090 முதல் 1194 வரை ஆண்டனர்.
- ரத்தோர்கள் பரம்பரையில் சிறந்த அரசர் ஜெயச்சந்திரன், கடைசி அரசரும் அவரே, கி.பி.1194ல் முகமது கோரியுடன்நடந்த சந்தவார் போரில் இவர் கொல்லப்பட்டார்.

**பந்தல்கண்ட் பகுதியை ஆண்ட சந்தேலர்கள்**

- பிரதிகாரர்களிடம் இருந்த பந்தல்கண்ட் பகுதியை கி.பி.9-ம் நூற்றாண்டில் சந்தேலர்கள் **த**னி அரசாக மாறினர்.
- மகோபாவை தலைநகரமாக நிறுவிய சந்தேல அரசர் யசோதவர்மன்
- சந்தேலர்களின் கடைசி அரசர் பாரமால் , இவரை 1203இல் **குத்புதின் ஐபக்** என்பவர் தோற்கடித்து சந்தேல அரசை கைப்பற்றினார்,
- கலிஞசார் கோட்டை சந்தேலர்களின் முக்கிய கோட்டையாகும்.
- கஜுராஹோவில் பல அழகிய கோயில்களை கட்டியவர்கள் சந்தேலர்களே ஆவர்.
- இந்த கோயில்களில் கி.பி.1050இல் கட்டப்பட்ட கந்தர்ய மகாதேவர் ஆலயம் பகழ்பெற்றதாகும்.

**7.மேவாரை ஆட்சி செய்த சிசோதியர்கள் அல்லது குகிலர்கள்**

- சிசோதிய மரபை தோற்றுவித்தவர் பாபாரவால்.
- மேவார் பகுதியில் ஆண்ட சிசோதியர்களின் தலைநகர் சித்தூர்.
- கி.பி.1307இல் டெல்லி சுல்தானான அலாவுதீன் கில்ஜியால் தோற்கடிக்கப்பட்ட இராணா ரத்தன்சிங் மேவார் பகுதியின் சிசோதியர்கள் வம்சத்தவரே.

- இராணா ரத்தன் சிங்கின் மனைவி பத்மினி தனது கணவர் இறந்தபின் ஜவஹர் என்ற வழக்கத்தின்படி தீயில் குதித்து இறந்தார்.
- ஜவஹர் என்பது சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஆகும். இது அந்த காலத்தில் இராஜபுத்திர பெண்களிடையே மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய ஒரு கடுமையான முறை ஆகும்.
- பிற்காலத்தில் முகலாயர்களை எதிர்த்து வீரமுடன் போரிட்ட ராணாசங்கா மகாராஜா ராணா பிரதாப் ஆகியோர் கிசோதிய மன்னர்களே.

8.**<u>மாளவம் பகுதியை ஆண்ட பரமாரர்கள்</u>**

- பிரதிகாரர்களிடம் இருந்து விலகி கி.பி.10ஆம் நூற்றாண்டில் தம்மைச் சுதந்திர அரசாக அறிவித்து பரமாரர்கள் ஆட்சி செய்தனர்.
- இவர்களது தலைநகரம் தாரா.
- இம்மரபின் பகழ்மிக்க அரசர் இராஜாபோஜ் (கி.பி.1080-1069). போபால் நகரில் 250 **சதுரமைல்** பரப்பில் ஒரு ஏரியை அமைத்தார் இவரே.
- போஜ் தாராவில் ஒரு சமஸ்கிருத கல்லூரி ஒன்றை நிறுவினார்
- அலாவுதீன் கில்ஜியில் பரமாரர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

**<u>சிறப்புகள்</u>**

- வீரமிகுந்தவர்கள் சிறந்த வீரர்கள், பெண்கள் கற்பினை உயிராக மதித்தனர்.
- எதிரிகளிடம் இருந்து விடுபட பெண்கள் ஜவஹர் என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை கடைப்பிடித்தனர்.

**<u>சமயம்</u>**

- இந்து மதத்தை போற்றி வளர்த்தனர். சமணமும், பௌத்தமும் ஆதரவு பெற்றிருந்தது.
- பக்தி இயக்கம் இவர்கள் காலத்தில் மலரத் தொடங்கியது.

**<u>அரசு</u>**

- அரசு நிலமானிய முறையை அடிப்படையாக கொண்டு இருந்தது.
- நாடு ஜாகிர்களாக பிரிக்கப்பட்டிருந்தது. அதன் தலைவர் ஜாகிர்தார்கள் , இவர்கள் வரிவசூலித்து மன்னருக்கு படை உதவி செய்தனர்.

**<u>மொழியும் இலக்கியமும்</u>**

- இவர்கள் காலத்தில் மராத்தி, குஜராத்தி, வங்க மொழி போன்ற வட்டார மொழிகள் வளர்ச்சியடைந்தன.
- கல்ஹணர் எழுதிய இராஜதரங்கிணி, ஜெயதேவரின் கீதகோவிந்தம், சோமதேவரின் கதா சரித சாகரம் ஆகியன இராஜபுத்திரர்கள் காலத்து இலக்கியங்கள்.
- பிரித்விராஜ் சௌகானின் அவைப்புலவர் **சந்த்பரிதை**. அவர் பிரித்விராசனின் படையெடுப்புகளைக் கூறும் **'பிரித்திவிராஜ் ரசோ'** என்னும் நூலை எழுதியுள்ளார்.
- சித்தாந்த சிரோமணி என்னும் நூலை எழுதியவர் பாஸ்கராச்சாரியார் இது வானவியல் நூல் ஆகும்.
- மகேந்திரபாலர், மகிபாலர் ஆகியோரின் அவைப்புலவர் இராசசேகரன் ஆவார்.
- இராசசேகரன் எழுதிய நூல்கள் கற்பூரமஞ்சரி, பால இராமாயணம்.

**<u>கலைக்கட்டிடக்கலை</u>**

- கஜிரஹோ ஆலயம் 2.புவனேஸ்வரத்தில் உள்ள லிங்கராசாகோவில் 3.கோனார்க்கில் உள்ள சூரியக் கோயில் 4.அபு மலை (இராஜஸ்தான்) தில்வாரா கோயில்.
- **அரண்மனைகள்:** ஜெய்ப்பூர், உதயப்பூர்
- **<u>கோட்டைகள்</u>**
- சித்தூர், மாண்டு, ஜோத்பூர், குவாலியர்.

**<u>ஆட்சி முடிவு</u>**

- தொடர்ந்த சண்டைகள் வெளிநாட்டு முஸ்லிம் படைபெயடுப்பு
- இறுதியில் இராஜபுத்திரர்களை ஒழித்து துருக்கியர்கள் தங்கள் ஆட்சியை இந்தியாவில் அமைத்தனர்.

# 2. **<u>தக்காண அரசுகள்</u>**

- இந்தியாவின் தெற்கு பகுதி தட்சிணபதம் (அ) தக்காணம் என்று அழைக்கப்படுகின்றது.
- வட இந்தியாவை, தென்னிந்தியாவிலிருந்து பிரிப்பது விந்திய சாத்பூரா மலைகள் மற்றும், நர்மதை, தபதி ஆறுகள்.
- சாளுக்கியர்களிடம் திறை செலுத்தி வந்தவர்களே யாதவர்கள், காகத்தீயர்கள் மற்றும் ஹொய்சாளர்கள்.

**<u>சாளுக்கியர்கள் (கி.பி.6-12 நூற்றாண்டு)</u>**

- தக்காணத்தை ஆண்ட முக்கிய ஆட்சியாளர்கள், இவர்களில் மூன்று பிரிவினர் இருந்தனர்.

1.முற்கால மேலைச்சாளுக்கியர்கள் (கி.பி.6-8 நூற்றாண்டுகள்)
2.பிற்கால மேலைச் சாளுக்கியர்கள் (கி.பி.10-12 நூற்றாண்டுகள்)
3.கீழைச் சாளுக்கியர்கள் (கி.பி.7-12 நூற்றாண்டுகள்)

**<u>1.முற்கால மேலைச் சாளுக்கியர்கள்</u>**

- முற்கால மேலைச் சாளுக்கியர்கள் வாதாபி சாளுக்கியர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். இம்மரபை தோற்றுவித்தவர் முதலாம் புலிகேசி (கி.பி.543- 546) ஆவார்.
- வாதாபி சாளுக்கியர்களில் சிறந்த அரசர் இரண்டாம் புலிகேசி
- இவர்களின் தலைநகரம் கர்நாடக மாநிலம் பீஜப்பூர் மாவட்டத்தில் உள்ள வாதாபி நகரமாகும். தற்போது இந்நகரம் ‘பதாமி’என்று அழைக்கப்படுகிறது.
- இரண்டாம் புலிகேசி ஹர்சரை கி.பி.637ல் நர்மதை ஆற்றங்கரையில் தோற்கடித்தார்.
- தமிழகத்தை ஆண்ட பல்லவ மன்னன் மகேந்திரவர்மனை 2-ம் புலிகேசி தோற்கடித்தார். 2-ம் புலிகேசி ஆனால் கி.பி.642ல் மகேந்திரனின் மகன் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசியை தோற்கடித்து கொன்றார்.
- 2-ம் புலிகேசியை தொடர்ந்து முதலாம் விக்கிரமாதித்தன், விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆகியோர் சாளுக்கிய மரபில் தகுந்த மன்னர்கள் ஆவார்.
- சாளுக்கியர்களுக்கும், பல்லவர்களுக்கும் இடையே அடிக்கடி பகை ஏற்பட்டு போர் தொடர்ந்து நடைப்பெற்றது.
- இராட்டிரகூட மரபை தோற்றுவித்த தந்திதுர்கர் சாளுக்கிய மன்னர் இரண்டாம் கீர்த்திவர்மனை தோற்கடித்து ‘வாதாபி’யை கைப்பற்றிக்கொண்டார். அதன்பின் 200 ஆண்டுகள் சாளுக்கிய மரபு புகழ்நிலையெய்தாது மங்கிய நிலையில் இருந்தது.

**கல்யாணியை ஆண்ட பிற்கால மேலை சாளுக்கியர் (கி.பி.10-12 நூற்றாண்டு)**

- பிற்கால மேலை சாளுக்கிய மரபை தோற்றுவித்தவர் இரண்டாம் தைலப்பா (கி.பி.973-997)
- பிற்கால மேலை சாளுக்கிய மரபின் தலைநகர் கல்யாணி.
- பிற்கால மேலை சாளுக்கிய மரபான கல்யாணியை ஆண்ட சிறந்த மன்னர்கள் இரண்டாம் சோமேஸ்வரன், இரண்டாம் ஜெயசிம்மன், ஆறாம் விக்கிரமாதித்தன்.மூன்றாம் தைலப்பா.
- கல்யாணியை ஆண்ட சாளுக்கியர்களில் இறுதி அரசர் மூன்றாம் தைலப்பா ஆவார்.(கி.பி.1150-1163)
- 1190-ஆம் ஆண்டில் சாளுக்கியர்களிடம் திறை செலுத்தி வந்த தேவகிரி யாதவர்கள், வாரங்கள் காகதியர்கள், துவார சமுத்திர ஹொய்சளர்கள் தங்களை சுதந்திர அரசாக்கிக்கொண்டு ஆண்டனர். அதனால் பிற்கால சாளுக்கிய மரபு 3 பேரரசாக பிரிந்தது.

**<u>3.வேங்கியை ஆண்ட கீழைச் சாளுக்கியர் (கி.பி.7-12 நூற்றாண்டு)</u>**

- வேங்கி கீழை சாளுக்கிய மரபை தோற்றுவித்தவர் இரண்டாம் புலிகேசியின் சகோதரர் விஷ்ணுவர்தனன் ஆவார்.
- இவர்களின் தலைநகர் வேங்கி.
- இவர்கள் ஆட்சியில் தெலுங்கு இலக்கியம் வளர்ச்சியுற்றது.
- இவர்கள் தஞ்சையை ஆண்ட சோழர்களுடன் திருமண உறவுகளை வைத்திருந்தனர். இத்திருமண உறவின் மூலம் தோன்றிய வாரிசே குலோத்துங்க சோழன் (கி.பி.1070-1122)ஆவார்.
- இவர்கள் தஞ்சையை ஆண்ட சோழர்களுடன் திருமண உறவுகளை வைத்திருந்தனர். இத்திருமண உறவின் மூலம் தோன்றிய வாரிசே குலோத்துங்க சோழன் (கி.பி.1070-1122) ஆவார்.
- இவர் கீழை சாளுக்கிய நாட்டினை சோழப் பேரரசுடன் இணைத்து சோழநாட்டு மன்னராக ஆட்சி செய்தார். இவரே கீழைச் சாளுக்கிய மரபின் கடைசி அரசர்.

- **சாளுக்கியர்களின் பங்களிப்பு**
- இந்து சமயத்தைப் போற்றினர். சமணத்தையும் ஆதரித்தனர்.
- இரண்டாம் புலிகேசியின் அவைப்புலவர் இரவிகீர்த்தி ஐஹோலே கல்வெட்டுகளைப் படைத்தவராவார். இக்கல்வெட்டுகளில் இரண்டாம் புலிகேசியின் வெற்றிகள் கூறப்பட்டுள்ளன. இவர் ஒரு சமணர்.
- ஐஹோலே நகரில் 70க்கும் மேற்பட்ட கோயில்கள் சாளுக்கியர்களால் கட்டப்பட்டன. இதனால் ஐஹோலே 'இந்திய கோயில் கட்டடக் கலையின் தொட்டில்' எனச் சிறப்பிக்கப்படுகிறது.
- பட்டாடக்கல் விருபாக்சா கோயில், பாதாமி குகைக்கோயில் ஆகியவை சாளுக்கியர்களுடையதே.
- இதில் பட்டாடக்கல் விருபாக்சர் கோயில், பல்லவர்கள் காஞ்சிபுரத்தில் கட்டிய கைலாசநாதர் கோயிலைப் போலக் கட்டப்பட்டுள்ளது.

**இராட்டிரகூடர்கள் (கி.பி.8-10 நூற்றாண்டுகள்)**

- இராட்டிரக்கூடர்களின் ஆட்சிகாலம் (கி.பி.753-975) இது தக்காண வரலாற்றின் சிறப்புமிக்க காலமாகும்.
- வடஇந்தியாவில் இருந்து வந்த ரத்தோர்களின் வழிவந்தவரே இராட்டிரக்கூடர்கள்.
- '**இராட்டிரக்கூடர்**'என்பதற்கு 'இராட்டிரம்' என்ற பகுதியை ஆள்பவர் என்பது பொருள்.
- இவர்கள் மேலைச்சாளுக்கியர்களிடம் இராட்டிர அதிகாரிகளாக பணியாற்றியவர்கள் ஆவர்.
- கன்னடம் இவர்களின் தாய்மொழி ஆகும்.
- இராட்டிரகூடர் மரபை தோற்றுவித்தவர் தந்திதுர்கர் ஆவார்.
- தந்திதுர்கர் பாதாமி அரசர் இரண்டாம் கீர்த்திவர்மன் என்பவரிடம் இராட்டிர அலுவலராக இருந்தபோது அவரிடம் இருந்து கி.பி.742ல் எல்லோராவை கைப்பற்றினார்.
- ஸ்ரீசைலம் (கர்னூல்) பகுதியை ஆண்ட சோழர்களையும் தந்திதுர்கர் அடிமைப்படுத்தினார்.
- கி.பி.750ல் காஞ்சியை ஆண்ட பல்லவ மல்லனுடன் திருமண ஒப்பந்தம் செய்து இவரது மகள் ரேவாவை பல்லவ மல்லனுக்கு திருமணம் செய்து வைத்தார்.
- பிறகு கி.பி.753ல் தான் திறை செலுத்தி வந்த மேலை சாளுக்கிய மன்னர் இரண்டாம் கீர்த்திவர்மன் என்பவனை தோற்கடித்து தக்காணப் பகுதியில் நிலையான அரசினை ஏற்படுத்தினார்.
- இராட்டிர கூடர்களின் தலைநகர் மால்கெட்.
- கி.பி.756ல் தந்திதுர்கர் மரணம் அடைந்தார், அவருக்குப்பின் முதலாம் கிருஷ்ணர் (கி.பி.**756-775**) அரசரானார்.
- புகழ்பெற்ற எல்லோராவின் கைலாசநாதர் குடைவரைக் கோயிலை உருவாக்கியவர் முதலாம் கிருஷ்ணரே ஆவார்.
- முதலாம் கிருஷ்ணருக்கு பின் இவரது மகன் இரண்டாம் கோவிந்தன் அவருக்குப்பின் துருவன் (கி.பி.**780-792**) ஆட்சிக்கு வந்தனர்.
- காஞ்சிபுரத்தை ஆண்ட பல்லவ மன்னன் தண்டிவர்மனையும் கனோஜ் மன்னர் சக்கரயுத்தனையும் துருவன் வென்றார்.
- துருவன் காலத்தில் இராட்டிரகூட நாடு புகழின் உச்சிக்கே சென்றது.
- துருவனுக்கு அடுத்து அவரது மூன்று மகன்களில் ஒருவரான மூன்றாம் கோவிந்தன் ஆட்சிக்கு வந்தார்.
- மூன்றாம் கோவிந்தன் பிரதிகார மன்னர் இரண்டாம் நாகபட்டரை வென்றார்.
- மூன்றாம் கோவிந்தனுக்கு பின் ஆட்சிக்கு வந்தவர் அவரது மகன் அமோகவர்சன் (**கி.பி.814-830**) தனது 14 வயதில் ஆட்சிக்கு வந்தார்.
- அமோக வர்சர் இலக்கியங்களை வளர்த்தார். இவர் கன்னட மொழியில் '**கவிராசமார்க்கம்**' என்ற இலக்கியத்தை படைத்து அருளினார்.
- அமோகவர்சனின் ஆசிரியர் ஜீனசேனர் ஆவார்.
- ஜீனசேனர் பார்சுவ உதயம் என்னும் நூலை எழுதியுள்ளார். இந்நூலில் சமண மத 23வது தீர்த்தங்கரர் பார்சுவநாதரின் வாழ்க்கை குறிப்புகள் சொல்லப்பட்டுள்ளன.
- அமோகவர்சன் சாளுக்கியர்களை தோற்கடித்து வெங்கியை கைப்பற்றினார்.
- அமோக வர்சருக்குப்பின் ஆட்சியேற்றவர்களில் குறிப்பிடத் தகுந்தவர் மூன்றாம் கிருஷணர்(**கி.பி.936-968**) ஆவார்.
- தக்கோலம் போரில் சோழர்களை வென்று தஞ்சாவூரை கைப்பற்றினார் மூன்றாம் கிருஷணன்.

- இராட்டிரகூடர்களின் கடைசி அரசர் இரண்டாம் கர்கா (கி.பி.**972-973**) இவர் கல்யாணியை ஆண்ட சாளுக்கிய அரசர் இரண்டாம் தைலபா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். இவ்வாறு இராட்டிரகூட அரசு இரண்டாம் தைலபாவால் முடிவுக்கு கொணடுவரப்பட்டது.
- இராட்டிரகூட அரசர்களில் தென்னிந்தியாவின் இராமேஸ்வரம் வரை படையெடுத்து சென்றவர் மூன்றாம் கிருஷ்ணன்,
- எல்லோரா, எலிபெண்டா குகைக் கோயிலை கட்டி முடித்தவர்கள் இராட்டிரகூடர்கள் ஆவர்.

**<u>துவார சமுத்திரத்தை ஆண்ட ஹொய்சளர்கள் (கி.பி.11-14 நூற்றாண்டு)</u>**

- இவர்கள் பிற்கால கல்யாணி மேலைச் சாளுக்கியர்களின் குருநில அரசர்களாவர்.
- இவர்களில் குறிப்பிடத்தக்க முதல் அரசர் வினயாதித்தன் (கி.பி.1006-22) மைசூர் பகுதியில் ஒரு சிற்றரசை நிறுவி **'சோசவீர்'** என்ற தலைநகர் பகுதியை இவர் உருவாக்கினார்.
- இம்மரபில் வந்த விஷ்ணுவர்தனர் தனது தலைநகரை துவாரசமுத்திரத்திற்கு மாற்றினார். மேலும் குலோத்துங்க சோழனிடமிருந்து சுங்கவாடி பகுதி சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இடையீட்டு பகுதியாக இருந்தது.
- யாதவ மரபைச் சார்ந்த ஐந்தாம் பில்லமாவை வென்று ஹொய்சளர்களின் வலிமையை உறுதி செய்தவர் இரண்டாம் வீரபல்லாளா (கி.பி.1173-1220)
- ஹொய்சள அரசான இரண்டாம் நரசிம்மன் (கி.பி.**1220-1235**) தமிழகத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டியனைத் தோற்கடித்து சோழநாட்டுப் பகுதியினை மூன்றாம் இராசராசனுக்கு மீட்டு கொடுத்தார்.
- ஹொய்சாள மரபின் பிற்கால மன்னர்களில் சிறந்த பேரரசர் மூன்றாம் பல்லாளா (கி.பி.1291-1342), இவர் கி.பி.1310-ல் மாலிக்காபூர் என்பவனால் தோற்கடிக்கப்பட்டார்.
- ஹொய்சாள மரபின் இறுதி அரசர் நான்காம் பல்லாளா ஆவார்.
- இவர்கள் கட்டிய கோயில்கள் காணப்படும் இடங்கள் துவார சமுத்திரம், பேலூர். இக்கோயில்களில் இராமாயணம், மகாபாரத காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- நியச்சந்திரா, கண்டி, ராகவங்கர், நேமிச்சந்திரன் ஆகியோர் இக்காலத்தில் சிறந்த இலக்கியங்களை படைத்தவர்கள் ஆவர்.

**<u>வாரங்களை ஆண்ட காகதியர்கள் (கி.பி.12-14 நூற்றாண்டு)</u>**

- கல்யாணியை ஆண்ட மேலைச்சாளுக்கியர்களிடம் குறுநில அரசர்களாக இருந்தவர்களே காகத்தியர்கள். இவர்கள் வாரங்கள் பகுதியை ஆண்டவர்கள்.
- இவர்களது தலைநகரம் அனுமகொண்டா.
- குறிப்பிடத்தகுந்த முதல் அரசர் இரண்டாம் புரோலா இவரது மகன் முதலாம் பிரதாப்ருத்ரன் தமது தலைநகரை வராங்களுக்கு மாற்றினார்.
- கணபதி என்ற காகத்திய மன்னர் சோழர்களிடம் இருந்து காஞ்சி பகுதியை வென்றார்.
- காகத்திய அரசின் பெண்ணரசி கணபதியின் மகள் ருத்ராம்பாள் (கி.பி.**1261-1291**) இவரது பேரன் இரண்டாம் பிரதாபருத்ரன்.
- இரண்டாம் பிரதாபருத்ரன் ஆட்சியின்போது மாலிக்காபூர் கி.பி.1309-இல் வாரங்கள் மீது படையெடுத்தார். தன்னை பாதுகாத்துக்கொள்ள ஏராளமான செல்வத்தை மாலிக்காபூருக்கு பிரதாபருத்ரன் தந்தார்.
- கியாசுதீன் துக்ளக் மகன் உலுக்கான் கி.பி.**1323-**ல் வாரங்களை தாக்கினார்.
- **1327-**ல் உலுக்கான் ,முகமது பின் துக்ளக் என்ற பெயருடன் டெல்லி சுல்தான் ஆனவுடன் கி.பி.1327ல் வாரங்களை கைப்பற்றினார்.
- காகதியர்களின் இறுதி மன்னர் வினயகதேவன் கி.பி.**1362-**ல் இவரை பாமினி சுல்தான் முதலாம் முகமதுஷா படுகொலை செய்தார். இதனால் காகதிய அரசு முடிவுக்கு வந்தது.
- அனும கொண்டாவில் உள்ள ஆயிரம் தூண் ஆலயம் இவர்களது கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

**<u>தேவகிரியை ஆண்ட யாதவர்கள் (கி.பி.12-14 நூற்றாண்டு)</u>**

- தேவகிரியை ஆண் யாதவர்கள் தங்களை புராண நாயகனான கிருஷ்ண பகவானின் வழிவந்தோர் எனக் கூறிக்கொண்டனர்.
- இவர்கள் சௌவுனா பகுதியை ஆண்டதால் (நாசிக்கிலிருந்து தேவகிரி வரை) சௌனர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.
- தேவகிரியை சுதந்திர அரசாக மாற்றியவர் ஐந்தாம் பில்லம்மா.
- ஐந்தாம் பில்லம்மா ஹொய்சாள மன்னர் இரண்டாம் வீரபல்லாளனுடன் போரிட்டு லக்குண்டி போர்களத்தில் இறந்தார்.
- இம்மரபின் இறுதி மன்னர் இராமச்சந்திர தேவா (கி.பி.**1271-1309**) இவரை அலாவுதின் கில்ஜி தோற்கடித்தார்.
- இராமசந்தரதேவாவின் மகன் சங்கரதேவன் மாலிக்கபூரால் தோற்கடிக்கப்பட்டார்.
- யாதவர்களின் தலைநகர் தேவகிரி இதற்கு தௌலதாபாத் என்ற பெயரும் உண்டு.
- இவர்கள் அறிவியலையும், வானவியலையும் ஆதரித்தனர்.

# <u>3.தென்னிந்திய அரசுகள்</u>

- பண்டைய தமிழகத்தை சேர, சோழ, பாண்டியர்கள் என்ற மூவரும் அரசியலி பிரிவினர் ஆட்சி செய்தனர். அவர்கள் ஆட்சி காலம் ‘சுங்க காலம்’ எனப்பட்டது. **(கி.மு.300 முதல் கி.பி.300வரை)**
- சங்க காலத்திற்கு பிறகு கி.பி.300 முதல் 600 வரை **‘களப்பிரர்கள்’** என்ற மரபினர் தமிழகத்தை ஆண்டனர்.
- களப்பிரர்களுக்கு பின் மீண்டும் பிற்கால பல்லவப் பேரரசு சோழப்பேரரசு, பாண்டியப் பேரரசு போன்ற மரபுகள் தமிழகத்தில் ஆட்சி செய்தன.

## <u>1.பல்லவப் பேரரசு</u>

- பல்லவர்கள், பாரசீகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சாதவாகனர்கள் கீழ் ஆட்சி அலுவலர்களாக இருந்தவர்கள் என்றும் தொண்டை மண்டலத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் கூறுவர்.
- பல்லவ மரபு முற்கால பல்லவர், பிற்காலப் பல்லவர் என இரண்டாக பிரித்து வழங்கப்படுகிறது.
- முற்காலப் பல்லவர்களைப் பற்றி சரியான வரலாறு கிடைக்கவில்லை.

### <u>பிற்காலப் பல்லவர்கள் (கி.பி.570-903)</u>

- பிற்கால பல்லவ மரபை துவக்கி வைத்தவர் சிம்ம விஷ்ணு ஆவார். இவர் ‘அவணி சிம்மன்’என்று அழைக்கப்பட்டார் இதற்கு ‘உலகின் சிங்கம்’ என்று பொருள். இவர் 6-ம் நூற்றாண்டின் இடைப்பகுப்பகுதியில் களப்பிரர்களை வீழ்த்தி தொண்டை மண்டலம் என வழங்கப்படுகிற இன்றைய காஞ்சிபுரம் பகுதியில் பல்லவர் ஆட்சியை தொடங்கி வைத்தார்.
- இவர் சோழர்களை வென்று ஆந்திரப் பகுதியான விஷ்ணுகுண்டின் முதல் தெற்கில் காவிரி ஆறு வரையில் தனது பேரரசை விரிவுபடுத்தினார்.

### <u>முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.600-630)</u>

- சிம்மவிஷ்ணுவின் மகன்
- இவரை சாளுக்கிய மன்னர் 2-ம் புலிகேசி தோற்கடித்தார்.
- தனது ஆட்சி தொடக்கத்தில் சமணராக இருந்த இவரை சைவக்குரவர் அப்பர் என்பவர் சைவ மதத்திற்கு மாற்றினார்.
- மண்டகப்பட்டு, பல்லாவரம், மாமண்டூர், மகேந்திரவாடி, தளவானூர், திருச்சிராப்பள்ளி, சியமங்கலம் ஆகிய இடங்களில் இவர் குடவரைக் கோயில்களை அமைத்துள்ளார்.
- மகேந்திரவர்மன் இசை மற்றும் ஓவியக்கலையில் வல்லுநர் ஆதலால் இவர் ‘சங்கீரண சாதி’ என்றும் ஓவியக்கலையில் வல்லுநர் ஆதலால் இவர் சித்திரக்கார புலி எனவும் புகழப்பட்டார்.
- மகேந்திரவர்மன் **‘மத்தவிலாச பிரகசனம்’** மற்றும் ‘பகவதவியூகம்’ ஆகிய வடமொழி நூல்களை எழுதியுள்ளார்.

### <u>முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி.630-668)</u>

- முதலாம் மகேந்திரவர்மனின் மகன்.
- இவரை **‘மாமல்லன்’** என்றும் அழைப்பர், இவரது பெயராலேயே மாமல்லபுரம் என்னும் ஊர் வழக்கத்திற்கு வந்தது.
- மாமல்லன் என்றால் மற்போரில் சிறந்தவன் என்பது பொருள்.
- தனது தந்தையை தோற்கடித்த 2-ம் புலிகேசியை அவரது தலைநகர் வாதாபி வரை சென்று தாக்கி அவரை கொன்றதால் இவர் **‘வாதாபி கொண்டான்’** எனவும் புகழப்பட்டான்.
- தனது இந்த படையெடுப்பில் ஈடுபட்ட இவரது படைதளபதி ‘பரஞ்சோதி’ ஆவார்.
- இவர் தனது இலங்கையின் நண்பன் ‘மாணவர்மனுக்காக’ இருமுறை இலங்கையின் மீது போரிட்டு ஆட்சியை மீட்டு கொடுத்தார்.
- இவரது ஆட்சியின்போதுதான் ஹர்சரின் அவைக்கு வந்த யுவான் சுவாங் காஞ்சிக்கும் வருகை புரிந்தார்.
- மாமல்லபுர ஒற்றைக்கல் இரதம், இவர் உருவாக்கியதே.
- இவரை தொடர்ந்து இவரது மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி.668-670) முதலாம் பரமேஸ்வரவர்மன் (கி.பி.670-691) ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

**<u>இரண்டாம் நரசிம்மவர்மன் (அ) இராஜசிம்மன் (கி.பி,691-728)</u>**

- முதலாம் பரமேஸ்வரவர்மனின் மகன்.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் , மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை கோயில், பனைமலை தாளகீரிஸ்வரர் கோயில் இவரால் கட்டப்பட்டவை.
- இவரது அரண்மனையில் இருந்த வடமொழி அறிஞர் தண்டி ஆவார். இவர் தண்டி அலங்காரம் என்னும் நூலை எழுதியுள்ளார்.இது சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இலக்கணநூல்.
- இவரது ஆட்சியில் சீனாவுடன் வணிக உறவு ஏற்பட்டது.

**<u>இரண்டாம் பரமேஸ்வரவர்மன் (கி.பி.728-731)</u>**

- இரண்டாம் நரசிம்மவர்மன் மகன் கி.பி.728ல் அரியணை ஏறினார்.
- இவர் சாளுக்கிய மன்னர் இரண்டாம் விக்கிரமாதித்தனால் போரில் கொல்லப்பட்டார்.
- இவரோடு சிம்மவிஷ்ணு வழிவந்த பல்லவ மரபு முடிவுக்கு வந்தது. சிம்மவிஷ்ணுவின் வழிவந்தோரில், காஞ்சியை ஆண்ட கடைசி பல்லவ மன்னர் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் ஆவார்.

**<u>இரண்டாம் நந்திவர்மன் (கி.பி.731-796</u>**)

- இவர் சிம்மவிஷ்ணு தம்பி இரண்யவர்மனின் மகன்.
- இவர் ஒரு விஷ்ணு பக்தன் (வைணவம்).
- காஞ்சியில் வைகுந்த பெருமாள் கோயிலைக் கட்டியவர் இவரே.
- திருமங்கை ஆழ்வார் இவரின் சமகாலத்தவர்.

**<u>மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.847-870)</u>**

- இவர் 'தெள்ளாறு' என்னுமிடத்தில் நடந்த போரில் பாண்டியம மன்னன் ஸ்ரீவல்லபனை வென்றார். எனவே இவர் 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்று நந்திகலம்பகம் என்னும் நூல் புகழ்கிறது.

**<u>பல்லவ ஆட்சி முடிவு</u>**

- மூன்றாம் நந்திவர்மனுக்கு அடுத்து அவரது மூத்த மகன் நிருபதுங்கன் ஆட்சிக்கு வந்தார். நிருபதுங்கனின் மாற்றாந்தாயிக்கு பிறந்தவர் அபராஜிதன் ஆவார்.
- இவர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாரிசுரிமை போரே திருப்புறம்பியம் போர் எனப்பட்டது.
- இப்போரில் அபராஜிதனுக்கு கங்கரும், சோழமன்னன் முதலாம் ஆதித்தனும் உதவி புரிந்தனர். முதலாம் ஆதித்தன் ஆட்சியை மீட்டு கொடுத்து பிறகு அபராஜிதனைக் கொன்று (கி.பி.913) காஞ்சியை கைப்பற்றி சோழ பேரரசுடன் இணைத்தார்.
- அபராஜிதனின் ஆட்சி 18 ஆண்டுகள் (கி.பி.895/913) நீடித்தது. இவரே பல்லவ மரபின் கடைசி அரசர் ஆவார்.
- ஆகவே பல்லவரின் ஆட்சிக்கு முடிவு கட்டிய போர் திருபுறம்பியம் போர் (கி.பி.895) ஆகும்.
- **பல்லவர்கள் நிர்வாகம்**
- பல்லவ நாடு பல '**ராஷ்டிரம்**' என்ற அமைப்பாக பிரிக்கப்பட்டு இருந்தது.
- ராஷ்டிரம் (மண்டலம்)→ விஷயங்கள்(கோட்டம்) → நாடு → ஊர் என்ற அடிப்படையில் பல்லவ நாடு பிரிக்கப்பட்டிருந்தது.
- மைய அரசின் தலைவர் அரசருக்கு அமைச்சர்கள் உதவிபுரிந்தனர்.
- நிர்வாகத்தின் அடிப்படை அலகு கிராமம். இதனை நிர்வகித்தது 'ஊர் அவை'.
- கிராம வளர்ச்சிக்கு 'வாரியங்கள் சுமார் 20 எண்ணிக்கையில் இருந்தன.

- **இலக்கியம்**

  1.முதலாம் மகேந்திரவர்மன் - மத்தவிலாசபிரகசனம் பகவதவீயூகம்.

  2.பாரவி - கீர்தார்சுனியம்

  3.தண்டி - தண்டியலங்காரம், அவந்தி சுந்தரி கதாசாரம்

  4.பெருந்தேவனார் - பாரதவெண்பா

  5.ஆசிரியர் பெயர் தெரியாத நந்தி கலம்பகம் மற்றும்

  6.ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடிய பாடல்கள்
- **<u>கலைகள்</u>**
- மகேந்திரவாடி, மாமாண்டூர், தளவானூர், சியமங்கலம்,திருச்சி, திருக்கழுகுன்றம் கோயில்கள் இவை பாறைக்குடவு கோயில்கள், இவை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தவை.
- ஒற்றைக்கல் இரதங்கள், மண்டபங்கள், மாமல்லபுரம்
- பல்லவர்கால ஓவியங்கள் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படுகின்றன.
- **சோழப்பேரரசு**
- சோழர்கள் பற்றிய வரலாறு மகாபாரதத்திலும் அசோகரின் கல்வெட்டுகளிலும், மெகஸ்தனிஸ், தாலமி ஆகியோரது குறிப்புகளிலும் காணப்படுகிறது.
- சோழர்களின் பழைய தலைநகரம் உறையூர் இலச்சினை புலி.
- முற்காலச் சோழர்களில் கரிகாழச் சோழன் புகழ்பெற்றவர். இவர் கல்லனையை கட்டியவர் ஆவார்.

**<u>பிற்காலச் சோழர்கள்</u>**

- பிற்காலச் சோழர்கள் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் இடையில் வலிமைப் பெற்றனர்.
- பிற்கால சோழர் மரபை உருவாக்கியவர் விஜயாலயச்சோழன் (கி.பி.**850-871**)
- விஜயாலயச் சோழன் முத்தரையர்களிடம் இருந்து தஞ்சாவூரைக் கைப்பற்றினார். பின்னர் தஞ்சை இவர்களது தலைநகரமானது.
- விஜயாலயச் சோழனின் மகன் முதலாம் ஆதித்த சோழன் (கி.பி.871-907) இவர் தொண்டைமண்டலம், கங்கர்**களின்** கொங்கு மண்டலத்தையும் வென்றார்.
- ஆதித்த சோழனனின் மகன் முதலாம் பராந்தகன் (கி.பி.907-955) இவர் பாண்டியர்களை வென்று மதுரையை கைப்பற்றினார். ஆதலால் பராந்தக சோழன் 'மதுரை கொண்டான்' எனப்புகழப்பட்டார்.
- இராட்டிரகூடி மன்னர் மூன்றாம் கிருஷ்ணன் கி.பி.**955-இல்** போரில் பராந்தகனை தோற்கடித்தார்.

**<u>பராந்தகனுக்கு பின் ஆட்சியமைத்தவர்கள்</u>**

- 1.கண்டராதித்தன் (கி.பி.**949-957)**
- 2.அரிஞ்சயன் (கி.பி.**956-957)**
- 3.இரண்டாம் பராந்தகன் (கி.பி.**956-973)**
- 4.ஆதித்தன்(கி.பி.**956-966)**
- 5.உத்தம சோழன் (கி.பி.**965-985)**

**<u>முதலாம் இராஜராஜசோழன் (கி.பி.985-1014)</u>**

- சோழர்களில் மிக சிறந்த ஆட்சியாளர்
- சேரர், பாண்டியர்கள், சாளுக்கியர்கள் ஆகியோர்களை போரில் வென்றார்.
- இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தனை வென்று அவன் தலைநகர் அனுராதபுரத்தை தாக்கி அழித்து தலைநகரை பொலனருவுக்கு மாற்றினார். அங்கு சிவன் கோயில் ஒன்றையும் கட்டினார்.
- இராஜராஜசோழன் முந்நீர் பழந்தீவுகள் எனப்பட்ட மாலத்தீவுகள் மற்றும் காந்தளூர் சாலை (திருவனந்தபுரம்) என்னுமிடத்தில் சேர மன்னன் பாஸ்கரவர்மன் போன்றவர்களையும் வென்றார்.
- கல்யாணியை ஆண்ட சத்யசரயாவை தோற்கடித்து வேங்கி பகுதியை கைப்பற்றி அதை சக்திவர்மனுக்கு அளித்தார்.
- இவருடைய மகளை சக்திவர்மனின் சகோதரர் விமலாதித்தனுக்கு மணமுடித்தார்.
- கங்கவாடி, தடிகைபாடி, நொளம்பாடி ஆகிய மைசூர் பகுதியையும் ரெய்ச்சூர், தோஆப் பகுதியையும் வென்றார்.
- மும்முடிச்சோழன், ஜெயங்கொண்டான், சிவபாதசேகரன் போன்றவை இராஜராஜனின் சிறப்பு பெயர்கள்
- தேவாரம் இவர் காலத்தில்தான் தொகுக்கப்பட்டது.
- கி.பி.1010-ஆம ஆண்டில் தஞ்சையில் இவர் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினார்.
- இவர் கி.பி.**1014-இல்** இறந்தார்.

**முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1012-1044)**

- இராஜராஜசோழனின் மகன்.
- இவர் இடைத்துறை நாடு எனப்பட்ட ரெய்ச்சூர் தோஆப், வனவாசி என்ற கடம்பரின் தலைநகரப்பகுதி, கொள்ளிபாக்கை என்னும் ஹைதராபாத் பகுதி, மண்ணைக்கடக்கம் என்ற மால்கெட், ஈழமண்டலம், பாண்டியர், சேரர், மேலைச் சாளுக்கியர்களையும் இவர் வென்றார்.
- வங்காளத்தின் மீது படையெடுத்து மகிபாலன் என்பவனை வென்றார், இவ்வெற்றியின் நினைவாக 'கங்கைக்கொண்ட சோழபுரம்' என்னும் நகரை நிறுவினார்.
- கடல் கடந்து போரிடுவதில் ராஜேந்திரன் வல்லவர். இவர் ஸ்ரீவிஜயம், கடாரம், நிக்கோபார் தீவுகள், மலேயா தீவுகள் போன்ற பகுதிகளை கடல்கடந்து சென்று கைப்பற்றினார்.
- கங்கைக் கொண்டான், பண்டித சோழன், கடாரம் கொண்டான் போன்றவை இவரது சிறப்பு பெயர்கள்.
- இவர் காலத்தில் சோழ பேரரசு உச்சநிலையை அடைந்தது.

**இவரது வழிதோன்றல்கள்**

- 1.முதலாம் இராஜாதிராஜன் கி.பி.**1018-1054**
- 2.இரண்டாம் இராஜேந்திரன் - கி.பி.1056-1064
- 3.இராசமகேந்திரன் - கி.பி.1060-1067
- 4.வீரஇராசேந்திரன் - கி.பி.1063-1067
- 5.ஆதி இராசேந்திரன் - கி.பி.1067-1070

**முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1071-1122)**

- முதலாம் இராசேந்திரன் மகள் அம்மாங்காதேவிக்கும், வேங்கியைச்சேர்ந்த இராசராசனுக்கும் பிறந்தவர்.
- வேங்கியை ஆண்ட சாளுக்கிய மரபைச்சேர்ந்தவர்.
- இவர் சோழநாட்டையும், வேங்கியையும் ஒருங்கிணைத்து ஆண்டார். இதனால் சாளுக்கிய சோழ மரபை இவர் தோற்றுவித்தவராக கருதப்படுகிறார்.
- இவர் மேலை சாளுக்கியரை வென்று கலிங்கத்தை கைப்பற்றினார்.
- இவர் காலத்தில் இலங்கை சோழப்பேரரசில் இருந்து விடுதலைப்பெற்றது.
- 1077-இல் ஸ்ரீவிஜயம் என்ற பகுதிக்கு வணிகக் குழுவினர் அனுப்பிவைத்தான்.
- சுங்கவரியை நீக்கியதால் இவர் '**சுங்கம் தவிர்த்த சோழன்**' எனப்பட்டான்.
- இவர் அரண்மணையில் கலிங்கத்து பரணியை இயற்றிய ஜெயங்கொண்டார், புகழேந்தி புலவர், கம்பர் முதலிய புலவர்கள் வாழ்ந்தனர்.

**சோழர்களின் வீழ்ச்சி**

- சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரன் (கி.பி.**1246-1279**) காலத்தில் சோழ பேரரசு சிதைவுற்றது.
- பிற்கால சோழர்களின் இறுதி அரசர் மூன்றாம் இராசேந்திரன்.
- மூன்றாம் இராசேந்திரனை, பாண்டிய மன்னர் இரண்டாம் ஜடாவர்ம சுந்தரபாண்டியன் வென்று சோழப்பேரரசை முடிவுக்கு கொண்டுவந்தார்.

**ஆட்சி முறை**

- சோழர்களின் நிர்வாக அடிப்படை அலகு 'ஊர்' ஆகும். பல ஊர்கள் சேர்ந்தவை வளநாடு என்றும் பல வளநாடுகள் சேர்ந்தது மண்டலம் என்றும் சோழ நாடு பிரிக்கப்பட்டிருந்தது. ஊர் ← வளநாடு ← மண்டலம்
- சோழர்கள் கிராம ஆட்சிமுறைக்கு வித்திட்டனர்.
- பராந்தக சோழன் காலத்தில் 'உத்திரமேரூர் கல்வெட்டு' சோழர்களின் கிராம நிர்வாகத்தைப் பற்றி விரிவாக விளக்குகிறது.
- கிராமசபை கிராம நிர்வாகத்தை மேற்பார்வையிட்டது. கிராமசபை உறுப்பினர்கள் குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- வாரியங்கள் என்ற விரிவான நிர்வாக அமைப்பும் இருந்தது. இதன் உறுப்பினர்கள் வாரிய பெருமக்கள் எனப்பட்டனர்.

- **சமூக பொருளாதார நிலை**

- சாதிமுறை இருந்தது, சதி, தேவதாசி முறை இருந்தது.
- பெண்கள் '**சிறுபாடு**' என்னும் சிறுசேமிப்பு பழக்கத்தை மேற்கொண்டனர்.
- இராஜராஜசோழன் காலத்தில் வரிவிதிப்பு கணக்கெடுப்புப் பணி சேனாதிபதி குரவன் என்பரால் மேற்கொள்ளப்பட்டது.
- நெசவு, ஊலோக உருக்குத் தொழில் மேன்மையுற்றிருந்தது.
- சீனா, சுமத்ரா, ஜாவா, ஆரேபியா ஆகிய நாடுகளுடன் வணிக உறவு இருந்தது.

**சமயமும் கல்வியும்**

- வைணவம், சமணமும் தளைத்திருந்தது. சோழர்கள் சோழர்கள் சைவத்தை பின்பற்றினர்.
- சோழர்கள் காலத்தில் ஆலயங்கள் மற்றும் மடங்கள் கல்வி கூடங்களாக திகழ்ந்தன. இங்கு வேதம், புராணங்கள், கணிதம், மருத்துவம் கற்பிக்கப்பட்டன.
- இந்த குறிப்புகள் எண்ணாயிரம், திருமுக்கூடல், திருபுவனம் ஆகிய கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

**இலக்கியம்**

1.சேக்கிழார் - பெரிய புராணம் (திருத்தொண்டர் புராணம்)
2.திருத்தக்கத்தேவர் - சீவக சிந்தாமணி
3.கம்பர் - கம்ப இராமாயணம்
4.செயங்கொண்டார் - கலிங்கத்துப்பரணி
5.நம்பியாண்டார் நம்பி - 12 சைவத் திருமுறைகள்
6.நாதமுனி - வைணவ நூலான நாலாயிர திவ்யபிரபந்தம்
7.ஒட்டக்கூத்தர் - மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாக பரணி
8.இளம்பூரணார், பரிமேலழகர், நச்சினார்க்கினியார் - உறையாசிரியர்கள்

**கலை**

சோழர்களின் கோயில் சிறப்புகளில் முக்கியமானது **'விமானங்கள்'** ஆகும்.

- நர்தாமலை விஜயாலய சோழீஸ்வரம், கொடும்பாளூர் ஐவர்கோயில் சோழர்கால முக்கிய கோயில்கள்.
- தஞ்சை பெரியகோயிலின் விமானம் 216 அடி கொண்டது.
- மூலவர் அறை விமானம் 13 அடுக்கு கொண்டது.
- தாராசுரம் அறிவட்டேசுவரர் கோயில் கும்பகோணம் அருகே திருபுவனம் கம்பஹரேஸ்வரர் அல்லது திருபுவனேஸ்வரர் கோயில் சோழர்களுடையதே ஆகும்.

**ஓவியம்**

- சோழர்களின் சுவர் ஓவியங்கள் தஞ்சை, திருமயம், காஞ்சி, நார்தாமலை விஷ்ணு கோயில் போன்ற இடங்களில் காணப்படுகிறது.

**இசை**

- கர்நாடக இசைக்கு அடித்தளமிட்டவர்கள் சோழர்களே, இதே காலக்கட்டத்தில்தான் பரத நாட்டியக் கலையும் தோன்றியது.

**பாண்டியர்கள்**

**ஆதாரங்கள்**

1.மெகஸ்தனிஸின் இண்டிகா குறிப்புகள்
2.பிளினி, கிரேக்க எழுத்தாளர் குறிப்புகள்
3.சமஸ்கிருத இலக்கண அறிஞர் கத்யாயணர் குறிப்பு
4.பழந்தமிழ் இலக்கியங்கள்
5.யுவான் சுவாங் குறிப்புகள் (சீனா)
6.மார்கபோலோ குறிப்புகள் (வெனிஸ் வர்த்தகர்)
7.இஸ்லாமிய அறிஞர் வாசப் குறிப்புகள்

**முற்கால பாண்டியர்கள்**

- சங்க காலப் பாண்டியர் எனப்படும் இவர்கள் மதுரையை தலைமையிடமாக கொண்டு சங்கம் வைத்து தமிழை வளர்த்தனர். இவர்களுடைய இலச்சினை மீன்.
- தமிழகத்தை களப்பிரர்கள் கைப்பற்றியபோது முற்கால பாண்டிய பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**முதலாம் பாண்டிய பேரரசு (கி.பி.550-950)**

- கி.பி.6-ம் நூற்றாண்டில் களப்பிரர்களை வென்று பாண்டியன் கடுங்கோன் மீண்டும் மதுரையில் பாண்டிய பேரரசை நிறுவினார். இது முதலாம் பாண்டிய பேரரசு எனப்பட்டது.
- இவர்கள் காலம் கி.பி.**550-950**
- அரிகேசரி மாறவர்மன், இரணதீரன், முதலாம் மாறவர்மன் இராஜசிம்மன், முதலாம் வரகுணன் மற்றும் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் ஆகியோர் முதலாம் பாண்டியப் பேரரசின் முக்கிய அரசர்கள்.
- இவர்கள் ஆட்சி தஞ்சை, திருச்சி, கோவை வரை பரவியிருந்தது.

- கி.பி.10 முதல் 11ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்ற பல்லவர், சோழர் போராட்டங்களில் பாண்டிய பேரரசு அழிவுற்றது. பின்னர் சோழர் வசம் பாண்டிய பேரரசு சென்றது.
- **இரண்டாம் பாண்டிய பேரரசு**
- கி.பி.13-ம் நூற்றாண்டில் பாண்டியர்கள் சோழர்களிடம் இருந்து மீண்டும் விடுபட்டனர்.
- விக்கிரம பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் சோழ வேந்தன் மூன்றாம் குலோத்துங்கன் விக்கிரம பாண்டியனுக்கு ஆட்சிரிமையை மீட்டு தந்தான்.
- விக்கிரம பாண்டியனின் மகன் முதலாம் ஜடாவர்ம குலசேகர பாண்டியன் அடுத்து ஆட்சிக்கு வந்தார், உண்மையில் இரண்டாம் பாண்டிய பேரரசை நிறுவிய பெருமை இவரையேசாரும்.

**<u>முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216-1238)</u>**

- கி.பி. **1219-**இல் மூன்றாம் குலோத்துங்க சோழனை வென்றார்.
- ஆனால் ஹொய்சாளர் தலையீட்டால் சோழநாட்டை மறுபடியும் அவர்களுக்கே திருப்பி வழங்கினார்.
- இதனால் ‘சோணாடுவழங்கியருளிய சுந்தரபாண்டியன்’ எனப் புகழப்பட்டார்.
- மாறவர்மனுக்கு பின் ஆட்சியமைத்தவர் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.**1238-1253**) இவர் ஹொய்சாள அரசர் சோமேஸ்வரன் உதவியுடன் சோழ மன்னன் மூன்றாம் இராஜேந்திரனிடமிருந்து சில பகுதிகளை மீட்டார்.

**<u>முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1253-1268)</u>**

- ‘**எம்மண்டலமும் கொண்டருளிய**’ சுந்தரபாண்டியன் எனப்பட்டார்.
- மகாராஜாதிராஜா, ஸ்ரீபரமேஸ்வரன், பொன்வேய்ந்த பெருமாள் என்ற பட்டப் பெயர்களும் இவருக்கு இருந்தது.
- இவரது மகன் முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.**1268-1308**) ஆட்சிக்கு வந்தார்.
- முதலாம் மாறவர்மன் குலசேகரன்
- இவர் **‘கொல்லம் கொண்ட பாண்டியன்’** என்று சிறப்பிக்கப்படுகிறார்.
- இவருக்கு 2 மகன்கள் 1.வீரபாண்டியன் 2.சுந்தரபாண்டியன்.
- வீரபாண்டியன் குலசேகரனுக்கு பின் அறியனை ஏறினார். இதனால் சுந்தரபாண்டியன் அரியணையை தனக்கு மீட்டுதர வேண்டி ‘மாலிகபூரை’ மதுரை மீது படையெடுக்க அழைத்தான்.
- பின்னர் டெல்லி சுல்தான்களில் துக்ளக் மரபினர் மதுரையை மீட்டு பாண்டியர்களை விரட்டி மதுரையில் சுல்தான்கள் ஆட்சியை நிறுவினர்.

**<u>பாண்டியர் நிர்வாகம்</u>**

- நாடுமண்டலம் ← வளநாடு ← ஊர் எனப்பிரிக்கப்பட்டிருந்தது.
- அறையர்கள் என்ற அமைச்சர்கள் அரசருக்கு உதவிபுரிந்தனர்.
- **‘வேளாண்மை’** முக்கியதொழில், வேளாண்மை செய்வோர்கள் பூமி புத்திரர்கள் எனப்பட்டனர்.
- முத்து குளித்தலுக்கு பாண்டிய பேரரசு பெயர்போனது.
- கொற்கை, தொண்டி, சிறந்த துறைமுகங்கள்.

**<u>இலக்கியம்</u>**

1.திருவாசகம் - மாணிக்கவாசகர்

2.திருப்பாவை - ஆண்டாள்

3.திருப்பல்லாண்டு - நம்மாழ்வார்

4.மகாபாரதம் - வில்லிபுத்தூரார்

5.நைடதம் - அதிவீரராம பாண்டியன்

6.சேயூர் முருகன் உலா, இரத்தினகிரி உலா - ஸ்ரீகவிராயர்.

- பாண்டியர்கள், திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை, திருச்சி, குன்றக்குடி, சித்தன்னவாசல் போன்ற இடங்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட குடைவரை கோயில்கள் அமைத்துள்ளனர்.
- கோயில்பட்டி, திருப்பத்தூர், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் கட்டுமான கோயில்கள் பாண்டியர்கள் கட்டியுள்ளனர்.
- குலசேகர பாண்டியன் தனது ஆட்சியின்போது அனைத்து கோயில்களுக்கும் அர்த்த மண்டபம், மணிமண்டபம், போன்றவற்றை கட்டி தந்துள்ளார்.
- ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தில் இயற்றப்பட்ட ‘**சித்தன்னவாசல்**’சுவரோவியம் பாண்டியர் ஓவியக் கலைக்கு எடுத்துக்காட்டு.

## 4.அரேபியர், துருக்கியர் படையெடுப்பு

- இஸ்லாம் மதத்தை தோற்றுவித்தவர் முகமது நபி (கி.பி.**570-632**)
- இஸ்லாம் மதம் முதல் முதலில் பாலைவன நாடுகளில் வளர்ந்தது.
- முதலில் இஸ்லாம் மதத்தை பின்பற்றியவர்கள் அரேபியர்கள் இவர்களே. இஸ்லாம் மதத்தை வலிமைமிக்க மதமாக மாற்றினார். இவர்களை தொடர்ந்து பாரசீகர்கள் இஸ்லாம் மதத்தை வலிமைப்படுத்தினர்.
- துருக்கியர்கள் இஸ்லாம் மதத்தை மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளில் பரவசெய்து உலக மதமாக மாற்றினார்,

### சிந்து படையெடுப்பு

- அரேபியர்கள் முதன்முதலில் இந்தியாவில் கி.பி.712 இல் **"சிந்து"** என்ற பகுதியின் மீது படையெடுத்தினர். அப்படையெடுப்பை நடத்தியவர் **"முகமது-பின்- காசிம்"**. இவர் **ஈராக் ஆளுநர் அல்ஹஜாஜ்**, என்பவரின் மருமகன். அப்போது கலி∴பாவாக இருந்த கலிபா வாலித் அனுமதியுடன், சிந்து மீது படையெடுக்க காசிமை ஹஜாஜ் அனுப்பி வைத்தார்.
- அப்போது சிந்துவை ஆண்ட மன்னர் "**தாஹிர்'**
- இப்படையெடுப்புக்கு காரணம் கடற்கொள்ளையர்களை தடுக்க தவறிய சிந்து அரசரை தாக்கவும் செல்வ வளத்தை சுரண்டவும் நடைபெற்றது. சிந்துவின் தலைநகர் 'ரேவாரில்' நடந்த போரில் தாஹிர் கொல்லப்பட்டார். அவரது மனைவி 'இராணிபால்' "ஜவஹர்" முறைப்படி தீக்குளித்து இறந்தார்.
- சிந்து கைப்பற்றப்பட்ட பின் '**முல்தான்**' எனப்பட்ட தங்கநகரமும் கைப்பற்றப்பட்டது.
- 6000- சிரியா நாட்டு குதிரைகள், 6000 ஒட்டகம், 3000 பாக்டீரிய நாட்டு ஒட்டகம் 2000 காலாட்படை, பாறைகளை எறியும் எந்திரம் என 25000 வீரர்களை கொண்டதாக காசிம் படை இருந்தது.
- சிந்து மூல்தான் பகுதி 150 ஆண்டுகளுக்கு மேலாக கலிபா ஆட்சியின் ஒரு பகுதியாக இருந்தது.
- சிந்து பகுதி நிர்வகிக்கும் பொருட்டு முகமது பின் காசிம் அதனை பல இக்தார்களாக பிரித்தார். முஸ்லிம் அல்லாதோர் மீது ஜிஸியா என்னும் வரி வசூலிக்கப்பட்டது.

குலிபா வாலித் என்பவருக்கு பின் சுலைமான் என்பவர் கலிபா ஆனார். அவர் முகமது பின் காசிமை கைது செய்து மெசபடோமியாவுக்கு அனுப்பினார். அங்கு அவர் கொல்லப்பட்டார்.

- அரேபியர் இப்படையெடுப்பின் வாயிலாக இந்திய எண்கள், வானவியற் கலைகளைக் கற்றனர். அவை அங்கிருந்து ஐரோப்பாவுக்கு பரவியது.
- பிரம்மசித்தாந்தம் என்னும் பிரம்மகுப்தரின் நூல் சமஸ்கிருதத்திலிருந்து அரபு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.
- இந்திய அறிவியலாளர்கள் பெயர்களான பஹலா, மானகா, சிந்துபாத் ஆகிய பெயர்கள் அரேபிய நூல்களில் இடம்பெற்றன.
- கலிபா ஹாருன்-அல்-ரஷித் என்பவருக்கு இருந்த ஆபத்தான நோயை 'மானகா' என்ற இந்தியர் குணப்படுத்தினர்.
- பாக்தாத் நகரின் தலைமை மருத்துவராக இருந்த இந்தியர் 'மருத்துவர் தாணா'.

### துருக்கியர் படையெடுப்பு

- இவர்கள் கி.பி.8 மற்றும் 9-ம் நூற்றாண்டுகளில் பாக்தாத் கலிபாக்களுடன் வசித்தனர். இவர்கள் அரேபியர்களை விட தீவிர ஆக்கிரமிப்பு கொள்கையுடையவர்கள்.

### முகமது கஜினி

- 'கஜினி' பகுதியை ஆண்ட 'முகமது' கஜினி முகமது எனப்படுகிறார்.
- இவர் சபுக்டிஜின் என்ற கஜினி மன்னரின் மகன்.
- கி.பி.1000 முதல் 1027 வரை இவர் இந்தியாவின்மீது 17 முறை படையெடுத்தார். கி.பி.**998-**இல் இவர் பதவி ஏற்றார்.
- '**சர் ஹென்றி எலியட்**'என்ற வரலாற்று ஆசிரியர் கஜினி முகமது 17 முறை இந்தியாமீது படையெடுத்ததாக கூறுகிறார்.
- இவரின் முதல் படையெடுப்பு இந்து சாகி அரசர் ஜெயபாலர் மீது நிகழ்ந்தது.
- பிறகு முல்தான் அரசர் பதே தாவூத் மற்றும் நாகர்கோட் அரசர் ஆனந்த பாலர் ஆகியோர் மீது படையெடுத்தார்.
- சந்தேலர், மதுரா, கனோஜ், குவாலியர் போன்ற இடங்கள் மீதும் தொடர்ந்து படையெடுத்தார்.

- படையெடுப்புகளிலேயே மிக முக்கிய படையெடுப்பு 16 வது படையெடுப்பான கி.பி.1025-இல் நடந்த 'சோமநாதபுர படையெடுப்பு' ஆகும். இப்பகுதி குஜராத் மாநிலம் கத்தியவார் பகுதியில் உள்ளது.
- இவர் படையெடுத்தபோது குஜராத் மன்னராக இருந்தவர் இராஜா பீமதேவன். இவர் அரண்மனையை விட்டு ஓடவே, கஜினி முகமது 20 லட்சம் தினார் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையிட்டு சென்றார்.
- கஜினி முகமது அரண்மனை புலவர் 'பிர்தௌசி' ஆவார். இவர் 'ஷா நாமா' என்னும் நூலை எழுதியுள்ளார். இவர் படையெடுப்பின் போது இவருடன் இந்தியா வந்தவர் 'அல்பருனி' ஆவார். அவர் எழுதிய நூல் 'தாரிக்-இ-ஹிந்த்' ஆகும்.
- பிறகு கஜினி பகுதியானது 1186 -இல் கோரி நாட்டையாண்ட அலாவுதீன் உசேன் என்பவரால் கொள்ளையடிக்கப்பட்டு சூறையாடப்பட்டது.

<u>முகமது கோரி</u>

- கோரி என்னும் பகுதியை ஆண்ட முகமது கோரி முகமது ஆவார்.
- 'ஹீரட் மற்றும் 'கஜினி'க்கும் இடையே உள்ள மலைப்பாங்கான நாடே கோரி ஆகும்.
- இவரின் முதல் படையெடுப்பு **1176-**இல் முல்தான், உச் என்ற பகுதி மீது நிலவியது.
- **1182-**இல் சிந்துவை வென்றார்.
- **1185-**இல் பஞ்சாபை வென்று சியால்கோட் என்னும் கோட்டையை கட்டினார்.
- **1186-**ல் லாகூரை வென்றார்.

<u>முதலாம் தரைன் போர் (1191)</u>

- 1191-இல் பிரித்விராஜ் சௌகான் என்ற இராஜபுத்திர மன்னனுக்கும் கோரிக்கும் இடையே 'தரைன்' என்ற இடத்தில் இப்போர் நடைபெற்றது. பதிண்டா கோட்டையை பிரித்விராஜ் மீட்டு கோரியை இப்போரில் தோற்கடித்தார்.
- இரண்டாம் தரைன்போர் (1192)
- 1192-இல் கோரி அதே 'தரைன்' என்னும் இடத்தில் பிரித்விராஜ் சௌகானை எதிர்கொண்டார். இப்போரில் கோரி வெற்றி பெற்றார். பிரித்விராஜ் சௌகான் கொல்லப்பட்டார்.
- துருக்கிய பேரரசு இந்தியாவில் அமைய இப்போர் வழிவகுத்து, முஸ்லிம் ஆட்சி இந்தியாவில் நிருவப்பட வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தது.
- இப்போரின் முடிவில் கோரி முகமது தான் வென்ற இந்திய பகுதிக்கு ஆளுநராக, தனது படைத்தளபதி 7 ம் அடிமையுமான 'குத்புதின் ஐபக்' எனபவரை நியமித்தார்.
- பிறகு 1193**-க்கும்** 1198-க்கும் இடையே தாம் இழந்த பகுதிகளை மீட்க பல இராசபுத்திர அரசுகள் முயன்றன. ஆனால் **'குத்புதின் ஐபக்'** இராஜபுத்திரர்களை அடக்கி அவர்களின் பகுதிகளை தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.
- அவர் ஏற்படுத்திய கோரி அரசின் தலைநகராக 'டெல்லி' அமைந்தது.
- கி.பி.**1194-இல் 'சந்தவார்'** எனும் போரில் கோரிமுகமது கன்னோஜ் அரசர் ஜெயசந்திரனை தோற்கடித்தார்.
- கோரி முகமது தனது இந்திய படையெடுப்பின் போது தனது படையை 5 பிரிவாக பிரித்து இருந்தார். இதில் 5வது படை **'காப்பு படை'** ஆகும்.
- முகமது கோரியின் மற்றொரு தளபதி 'முகமது-பின் -பக்தியார். கில்ஜி கி.பி.1202-1203- ஆண்டுகளில் **'விக்ரமசீலா'** மற்றும் **'நாளந்தா'** பல்கலைக்கழகங்களை இடித்து தரைமட்டமாக்கினார். மேலும் வங்காளம். பீகார் பகுதியையும் கைப்பற்றினார்.
- முடிவில் **1206-**ஆம் ஆண்டு ஷியா முஸ்லிம்களும், கோகர் படையினரும் மார்ச் 25-இல் கோரி முகமதுவை படுகொலை செய்தனர்.
- இந்திய பகுதியில் துருக்கிய பேரரசை நிறுவிய பெறுமை முகமது கோரியை சேரும்.

************************

# <u>5.டெல்லி சுல்தான்கள்</u>

- கி.பி.**1206** முதல் கி.பி.**1526** வரை டெல்லி சுல்தான்கள் காலம் எனப்படுகிறது. இந்த காலக் கட்டத்தில் 5 மரபுகள் ஆட்சி செய்தன. அவை

1.**மாம்லூக் (அ) அடிமை மரபு** (**1206-1290**)

- முதல் அரசர் குத்புதின் ஐபக்
- இறுதி அரசர் கைக்குபாத

**2.கில்ஜி மரபு** (1290-1320)

- முதல் அரசர் - ஜலாலுதின் பெரோஸ் கில்ஜி
- இறுதி அரசர் - குஸ்ருகான்

**3.துக்ளக் மரபு (1320-1413)**

- முதல் அரசர் - காஸி மாலிக் (அ) கியாசுதீன் துக்ளக்
- இறுதி அரசர் - நாசிர் உத்தின் முகமது

**4.சையது மரபு (1414-1451)**

- முதல் அரசர் - கிஸிர் கான்
- இறுதி அரசர் - அலாவுதீன் ஷா

**5.லோடி மரபு (1451-1526)**

- முதல் அரசர் - பஹ்லுல் லோடி
- இறுதி அரசர் - இப்ராஹிம் லோடி.

**1.மாம்லூக் (அ) அடிமை மரபு**

- இம்மரபினை நிறுவியவர் '**குத்புதின் ஐபக்**'.
- டெல்லி சுல்தான்கள் மரபை நிறுவியர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. இவர் கி.பி.1206 ஜூன் 24-ல் ஆட்சி பொறுப்பை ஏற்றார்.
- இந்தியாவில் துருக்கியர் ஆதிக்கத்தை தொடங்கியவரும் இவரே.
- 'மாம்லூக்' என்பது குரானின்படி 'அடிமை' என்று பொருள்படும்.
- இவர் ஆட்சி ஏற்றதும், ஆட்சியை நிலைநிறுத்த வேண்டிய கட்டாயத்தில் சில பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.
- இவருடைய தலைநகர் லாகூர்.
- கவாரிசம் பகுதியின் அலாவுதீன் முகமது டெல்லி கஜினியை கைப்பற்றாமல் தடுப்பது மற்றும் ராசபுத்திரர்கள் தான் இழந்த பகுதிகளை மீட்க மேற்கொள்ளும் முயற்சியை தடுப்பது.
- வங்காளத்தின் அலிமர்தன்கான் மற்றும் குபாச்சா, யுல்துஸ் ஆகியவர்களை அடக்கி துருக்கிய ஆட்சியை பாதுகாப்பது ஆகியவை இவரின் முக்கியப்பணி ஆகும்.
- ஐபக் அஜ்மீரில் '**குவ்வதுல் இஸ்லாம்**'என்ற மசூதியை கட்டினார். இது இஸ்லாமிய கட்டிடக்கலையின் முதல் கட்டிடம் ஆகும்.
- டெல்லியில் 'தாய்டின்கா ஜோன்பரா' மசூதியை, குதுப்மினார் என்ற கோபுர கட்டுமான பணிகளையும் துவக்கி வைத்தார்.
- இவர் அவையில் **ஹ**ாசன் நிசாமி, ஃபக்ரேமுதிர் போன்ற அறிஞர்கள் இருந்தனர்.
- லட்சங்களை கொடையாக வழங்கியதால் '**லாக்பக்ஷா**' எனப்புகழப்பட்டார்.
- போலோ விளையாட்டின்போது கி.பி.1210-இல் இறந்தார்.

- **இல்துமிஷ் (கி.பி.1211-1236)**

- மத்திய ஆசியாவின் இல்பாரி பழங்குடியினத்தை சேர்ந்தவர்.
- 1211-இல் குத்புதின் ஐபக்கின் மகன் மற்றும் மன்னருமான ஆராம்ஷாவை கொன்று அரியணை ஏறினார்.
- யுல்துஸ் என்ற கோரி முகமதுவின் வழித்தோன்றல் ஒருவனையும், உச், முல்தான் பகுதியை ஆண்ட நசூருத்தின் குபாச்சாவையும் வென்றார்,
- செங்கிஸ்கான் தலைமையில் மங்கோலியர்கள் 1211-இல் டெல்லி மீது படையெடுத்தனர்.

- மங்கோலியர்களால் தாக்கப்பட்ட கவாரிசம் பகுதியின் மன்னர் ஜலாலுதின் மங்கபர்னிக்கு இல்துமிஷ் அடைக்கலம் கொடுக்க மறுத்ததால் மங்கோலியர்கள் இல்துமிஷ் பகுதியை தாக்க முற்படவில்லை.

- இல்துமிஷ் வெளியிட்ட வெள்ளி நாணயம் '**டங்கா**', இது 175 மி.கி. எடையுள்ளது. ஜீடால் என்பது அவர் வெளியிட்ட செம்பு நாணயம் இவைகளில் அராபிய மொழி பொறிக்கப்பட்டுள்ளது.
- குதுப்மினார் குதுப் -உத்-தீன் பக்தியார் என்ற சூ.ஃபி துறவி நினைவாக கட்டப்பட்டது. இதனை கட்டி முடித்தவர் இல்துமிஷ்.
- 1236இல் இலதுமிஷ் பம்யான்கள் மீது போர் தொடுக்க முற்பட்டபோது நோய்வாய்பட்டு இறந்தார்.
- இல்துமிஸ் 'நாற்பதின்மர் குழு' என்ற துருக்கிய உயர்குடி பிரபுக்கள் அடங்கிய ஒரு குழுவை உருவாக்கினார். அவர்கள் 'சகல்கான்கள்' எனப்பட்டனர்.
- ஆரேபிய மொழியில் நாணயங்கள் வெளியிட்ட முதல் துருக்கியர் என்ற பெருமையை இவர் பெற்றார்.

**3. சுல்தானா ரசியா (கி.பி.1236-1240)**

- டெல்லியின் முதல் பெண்ணரசி இல்துமிஸின் மகள்.
- இவர் 'பிரோஸ் ஷா' வைத் கொன்று அரியனை ஏறினார்/
- 1240-இல் இவர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

**இரசியாவுக்கு பின் ஆட்சிக்கு வந்தவர்கள்**

1.பக்ரம்ஷா (கி.பி.1240-1242)

2.அலாவுதீன் மதூத் (1242-1246)

3.நசுருத்தின் மகமூத் (1240-1242

4.பால்பன் (கி.பி.1265-1287)

**4. கியாசுதின் பாால்பன் (கி.பி.1265-1287)**

- துருக்கிய இல்பாரி இனத்தைச் சேர்ந்தவர்.
- 1265இல் நதூருத்தின் முகமதுவின் இறப்பிற்கு பின்னர் பால்பன் ஆட்சியில் அமர்ந்தார்.
- இவர் 'தெய்வீக உரிமைகள் கோட்பாட்டில்' நம்பிக்கை வைத்திருந்தார்.
- பைபோஸ் என்னும் வணக்க முறைப்படி மன்னரின் காலை வணங்கி முத்தமிடும் முறையை கொண்டுவந்தார்.
- அடிமையாக, தண்ணீர் சுமக்கும் தொழிலாளியாக வேட்டைக்காரணாக தளபதியாக, இராஜ தந்திரியாக சுல்தானாக வாழ்ந்தவர் பால்பன் ஆவார்.
- இவர் நாற்பதின்மர் குழுவை ஒழித்தார்.
- இவரால் '**திவானி அர்ஸ்**' என்ற படைப்பிரிவு (இராணுவத்துறை) உருவாக்கப்பட்டது.
- இவர் காலத்தில் வங்காள ஆளுநராக இருந்து தன்னை சுதந்திர மன்னராக அறிவித்து கொண்டவர் துக்ரில்கான்.
- 'இந்தியக் கிளி' எனப்பட்ட அமீர்குஸ்ரு, அமீர்ஹாசன் என்ற கவிஞர்கள் இவர் அரண்மனையில் வசித்தனர்.
- இவர் காலத்தில் நடைப்பெற்ற மங்கோலியர் படையெடுப்பின்போது பால்பனின் மகன் முகமது இறந்த போனார். அதனால் பால்பன் நோய் வாய்பட்டு 1287-இல் இறந்தார்.
- பால்பனுக்கு பின் 'கைக்குபாத்' என்பவரும் அவரது மகன் கையுமார்சும் ஆட்சி செய்தனர்.

**கில்ஜி வம்சம் (ஜலாலுதீன் பெரோஸ் கில்ஜி (1290-1296))**

- 1290-இல் ஜலாலுதின் பெரோஸ் கில்ஜி டெல்லியின் ஆட்சியை கைப்பற்றினார்.
- கில்ஜி வம்சத்தின் முதல் அரசர் கருணை உள்ளம் கொண்டவர்.
- ஜலாலூதின் மருமகன் அலாவுதின் கில்ஜி இவர் காராவின் ஆளுநராக இருந்தார்.
- 'சித்தி மௌலா'என்ற மதவாதி ஜலாலுதின் ஆட்சியின்போது கலவரத்தில் ஈடுபட்டார் அவரை ஜலாவுதின் கொன்றார்.
- 1292இல் 'சூனம்' பகுதியில் ஏற்பட்ட மங்கோலியர் படையெடுப்பை தடுத்து அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார்.

அலாவூதீன் கில்ஜி ஜலாலுத்தின் கில்ஜியை கொன்று டெல்லி சுல்தானாக 1296இல் பதவி ஏற்றார்.

**அலாவுதின் கில்ஜி (1296-1316)**

- வட இந்தியா முழுவதையும் தனது ஆட்சிக்கு கீழ் கொண்டு வந்தார்.
- இவரின் வட இந்திய படையெடுப்பிற்கு தலைமை தாங்கியவர்கள் ‘உலுக்கான்’ மற்றும் ‘நசரத்கான்’ ஆவர். இவர்கள் குஜராத் படையெடுப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- இப்படை முதலில் ராந்தம்பூர், பகுதியை வென்று அதன் மன்னர் அமீர் தேவரை வெற்றிக் கொண்டனர். பிறகு சித்தூர், மாளவம், மாண்டு, உஜ்ஜயினி, சந்தேரி, மார்வார் போன்ற பகுதிகளும் கைப்பற்றப்பட்டன.

**தென்னிந்திய படையெடுப்பு**

- இதற்கு தலைமைத்தாங்கியவர் ‘**மாலிக்கபூர்**’
- முதல் முதலாக தென்னிந்தியாவின் மீது படையெடுத்த முதல் டெல்லி சுல்தான் இவரே ஆவார். தோற்கடிக்கப்பட்டவர்கள்:-

  1.தேவகிரி - இராமச்சந்திர தேவன்

  2.வராங்கள் - இரண்டாம் பிரதாபருத்ரன்

  3.ஹொய்சளர் - மூன்றாம் வீர பல்லாளன்.

  4.பாண்டியர்கள் - சுந்தரபாண்டியன், வீரபாண்டியன்.
- சுமார் 12 முறைக்கு மேல் மங்கோலியர் படையெடுப்பை அலாவுதீன் கில்ஜி தடுத்து நிறுத்தினார்.
- அலாவுதீன் தன்னை கடவுளின் பிரதிநிதியாக கருதினார்.
- நாட்டில் கலகம் நடப்பதை தடுக்க 4 கட்டளைகளை பிறப்பித்தார்.
- இலவசமாக வழங்கப்பட்ட மற்று சமயக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் பரிமுதல் செய்யப்பட்டது.
- ஒற்றர் முறையை மறு சீரமைப்பு செய்து பொது மக்கள் ஒன்று கூடுவதை தடுத்தார்.
- நிரந்தர நிலையான படைப்பிரிவை உருவாக்கினார்.
- குதிரைகளுக்கு சூடு போடும் முறையை கொண்டு வந்தார்.
- அங்காடிகளை கட்டுபடுத்தினார். பொருள்களின் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கள்ளச் சந்தைகள் ஒழிக்கப்பட்டன.
- வரிகளை பொருளாக செலுத்தும் முறையை கொண்டு வந்தார்.
- ஜிசியா வரி, மேய்ச்சல் வரி, வீட்டு வரி போன்ற பல புதிய வரிகளை விதித்தார்.
- அங்காடியை கட்டப்படுத்த திவானி ரியாஸத் மற்றும் ‘ஹானாயி மண்டி’ என்ற இரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
- பாமத்கானா மசூதி, அலைதர்வாசா, சிரிக் கோட்டை, ஆயிரம் தூண்கள் கொண்ட அரண்மனை ஆகியவைகளை அலாவுதீன் கட்டி முடித்தார்.
- அலாவுதீன் கில்ஜி கி.பி.1316-இல் இறந்தார். அவருக்கு பின் குதுப்-உத் - தின் முபாரக்ஷா (1316-1320)நஸ்குதின் குஸ்ருஷா (கி.பி.1320) ஆகியோர் ஆட்சி செய்தனர்.

**துக்ளக் மரபு**

- கியாசுதின் துக்ளக் துக்ளக் மரபை நிறுவியர் ஆவார். இவர் ‘காஸி மாலிக்’ என்றழைக்கப்பட்டார், இவர் குஸ்ரூ ஷா ஆட்சியின்போது பஞ்சாப் ஆளுநரான இருந்தார்.
- இவர் வேளாண்மை, பாசன வசதி, நீதித்துறை, காவல்துறை அஞ்சல்துறை முன்னேற்றங்களுக்கு வித்திட்டார்.
- வராங்கள். ஒரிஸாவின் உத்கல், வங்காளம் ஆகியன இவர் பேரரசுடன் இணைந்தன.
- 1325இல் வங்க படையெடுப்பின் வெற்றியினை கொண்டாடும்போது பந்தல் சரிந்து இறந்தார். இவரை தொடர்ந்து இவரது மகன் ‘**ஜீனாகான்**’ ஆட்சிக்கு வந்தார்.

**முகமதுபின் துக்ளக் (கி.பி.1325-1326)**

- ஜீனாகான் என்பது இவர் இயற்பெயர், இவர் பட்டப்பெயர் முகமது பின் துக்ளக்.
- 1327ல் வராங்கல் பகுதியை கைப்பற்றினார்.
- டிரான்ஸ் ஆக்ஸியானா, கொரெசான், ஈராக் படையெடுப்பை தொடர நினைத்தார்.
- மங்கோலிய படையெடுப்பை தடுக்க அவர்களின் தலைவர் ‘தமிஷிரின்’ என்பவனிடம் நட்பு பாராட்டி பரிசு வழங்கி நாட்டை பாதுகாத்தார்.

**உள்நாட்டு கொள்கை**

- உள்நாட்டு கொள்கை அனைத்தும் தோல்வியில் முடிந்தது.
- 1.காலியாக கிடந்த கருவூலத்தை நிரப்ப 'தோஆப்' பகுதி மீது வரிவிதிப்பு
- 2.தலைநகர் டெல்லியிலிருந்து தௌலதாபாத் (தேவகிரி) நகருக்கு மாற்றம்.
- 3.செப்பு நாணயங்கள் அறிமுகம்.
- திவான்-இ-அமிர் கோஹி என்னும் விவசாய துறையை முகமது பின் துக்ளக் உருவாக்கினார்.
- முகமது பின் துக்ளக் ஆட்சியில் சில நடைமுறைப்படுத்த இயலாத திட்டங்களால் டெல்லி சுல்தானிய வீழ்ச்சிக்கும், துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கும் காரணமாயின.
- 1336-ல் விஜயநகரப் பேரரசும் 1347 பாமினி சுல்தானிய பேரரசும் டெல்லியிலிருந்து பிரிந்து சுதந்திர அரசுகளாக இவர்காலத்தில் மலர்ந்தன.

**பிரோஸ் துக்ளக் (1351-1388)**

- கியாசுதின் துக்ளக் சகோதரர் மகன் பிரோஸ் துக்ளக் ஆவார். இவர் 1357இல் ஆட்சிக்கு வந்தார்.
- '**தக்காவி**' என்னும் விவசாய கடனை தள்ளுபடி செய்தார்.
- தேவையற்ற வரிகள் நீக்கப்பட்டன. ஆனால் பிராமணர்கள் மீது புதியதாக ஜிஸியா வரி பகுத்தப்பட்டது.

**அவர் விதித்த 4 வரிகள்.**

1.கரோஜ் - விளைச்சல் வரி 1/10 பங்கு

2.கம்ஸ் - போர்களில் கைப்பற்றிய பொருட்களில் 1/5 பங்கு

3.ஜிஸியா - இந்துக்கள் மீதான தலைவரி

4.ஜகாத் - இஸ்லாமிய மத சடங்கு வரி

- யமுனா கிஸார் உள்பட பல கால்வாய்களை வெட்டி பொதுப்பணித்துறையை மேம்படுத்தினார்.
- 150 கிணறுகள், 50 அணைகள், 100 பாலங்கள் ஆகியவைகள் கட்டப்பட்டன.
- பிரோஸாபாத், பெதாபாத், ஜான்பூர், ஹிஸ்ஸார் போன்ற நகரங்கள் உருவாக்கப்பட்டன.
- குரானின் படி சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- சித்ரவதை செய்தல், உடல் உறுப்புகளை வெட்டுதல் போன்ற தண்டனைகள் ஒழிக்கப்பட்டன,
- பூரி ஜெகந்நாதர் ஆலயத்தை அழித்தவர் இவரேயாவார்.
- இவரின் சுயசரிதை **பதூஹத்-இ-பெரோஷாஹி**' .
- இவர் பற்றிய வரலாற்று நூலான 'தாரிக்-இ-பெரோஷாஹி' என்னும் நூலை இவரது அலை புலவர் ஜியாவுத்தின் பரானி எழுதியுள்ளார்.
- இவரது காலத்தில் பல நூல்கள் சமஸ்கிருதத்திலிருந்து பாரசீக மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டன. அவற்றில் முக்கியமானது '**குதுப்-பெரோஸ்- ஸாஹி**' எண்ணும் இயற்பியல் தொடர்பான நூல் முக்கியமானது.

**தைமூர் படையெடுப்பு (கி.பி.1398)**

- நாசீர் உத்-தின்-முகமது என்ற துக்ளக் ஆட்சியாளரின் காலத்தில் 'தைமூர்' என்ற சமர்கண்டின் ஆட்சியாளர் டெல்லியை சூறையாட்டினார். இந்த படையெடுப்பின் விளைவாக துக்ளக் மரபு வீழ்ச்சியடைந்தது.

**சையது மரபு (1414 – 1451)**

- இம்மரபை நிறுவியவர் முல்தானின் ஆளுநராக இருந்த கிஸிர்கான் ஆவார்.
- 1421இல் கிஸிர்கானின் இறப்பிற்கு பின் அவரது மகன் முபாரக் ஷா (கி.பி.1421-1434) ஆட்சிக்கு வந்தார்.
- இவர் டெல்லி நீதிமன்றத்தில் இந்து உயர்குடியினரை நீதிபதிகளாக அமர்த்தினார்.
- யமுனை நதிக்கரையில் 'முபாரக் பாத்'என்னும் நகரை நிர்மானித்தார். இவர் 1434 இல் கொல்லப்பட்டார்.
- முபாரக் ஷாவுக்கு பின் முகமது ஷா (கி.பி.**1434-1445**) ஆட்சிக்கு வந்தார். லாகூர் ஆளுநராக அப்போது இருந்த பஹ்லல் லோடிக்கு 'கானி கானா' பட்டத்தை சூட்டினார்.

- முகமது ஷா வைத் தொடர்ந்து அலாவுதீன் ஷா (1445-1457) ஆட்சிக்கு வந்தார். ஆனால் இவரின் ஆட்சியின்போதும் லாகூர் ஆளுநராக இருந்த பகலுல் லோடி டெல்லியை கைப்பற்றி லோடி மரபை நிறுவினார்.
- கி.பி.1457 இல் சையது வம்சம் முடிவுக்கு வந்தது.
- **<u>லோடி மரபு</u>**
- நிறுவியவர் லாகூரின் ஆளநராக இருந்த பகலுல் லோடி (**1451-1489**)
- டெல்லி ஆண்ட சுல்தான்களில் இறுதி மரபு இதுவே ஆகும்.
- மேவார், சம்தல, சகிட், எட்வா, குவாலியர் போன்ற இடங்கள் வென்றார்.
- இவர் 1489 இல் இறந்தார்.
- பஹ்லுல் லோடிக்கு பின் சிக்கந்தர்ஷா ஆட்சிக்கு வந்தார்.
- புகழ்பெற்ற ‘ஆக்ரா’ என்னும் நகரை 1506-இல் நிறுவியவர் இவரே. லோடி வம்சத்து ஆட்சியின்போது ‘ஆக்ரா’ முக்கியத்துவம் பெற்று விளங்கியது.
- இவர் காலத்தில் கணிதம், யோகா, நூல்கள் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.
- இவர் ‘செனாய்’ இசையில் ஆர்வமுள்ளவர்.
- ‘லாஹ்-ஜட் -இ -சிக்கந்தர் ஷாஹி என்னும் இசைத் தொகுப்பு இவர் காலத்தில் உருவாக்கப்பட்டது.
- சிக்கந்தர் லோடிக்கு பின் ஆட்சிக்கு வந்தவர் ‘**இப்ராஹிம் லோடி**’ (1517-1526)
- டெல்லி சுல்தானியர்களில் கடைசி அரசர் இவரே. இவரை பாபர் முதலாம் பானிபட் போரில் 1526இல் தோற்கடித்து டெல்லி சுல்தானியத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.
- பாபரை இப்ராஹிம் லோடி மீது படையெடுக்க அழைத்தவர் பஞ்சாப் ஆளுநராக இருந்த ‘**தௌலத்கான் லோடி** ஆவார்.
- **<u>சுல்தான் ஆட்சி நிர்வாகம்</u>**
- கி.பி.1206 முதல் கி.பி.1526 வரை 320 ஆண்டுகள் நிலவியது.

**<u>அமைச்சர்கள்</u>**

1. வசீர் - பிரதமர் மற்றும் நிதியமைச்சர்
2. திவானி ரிஸாலத் - வெளியுறவு அமைச்சர்
3. சதர்- உஸ்சதர் - இஸ்லாமிய சட்ட அமைச்சர்
4. திவானி இன்ஸா - அஞ்சல் துறை அமைச்சர்
5. திவானி அர்ஸ் - பாதுகாப்பு (அ) படைத்துறை
6. காஸி உல் கஸாத் - நீதித்துறை
7. திவான் இ அமிர்கோஹி - வேளாண்மை

- பேரரசு இக்தா ஷிக் பர்கானா கிராமம் எனப்பிரிக்கப்பட்டிருந்தது.
- ஷிக் பகுதியின் நிர்வாகி ஷிக்தார்.
- அமில் அல்லது முன்ஷிப் பர்கானாவின் முக்கிய அலுவலர்
- நாட்டின் முக்கிய வருவாய் நிலவரி
- தலைமை நீதிபதி காஸி உத் கஸாத் எனப்பட்டார்.
- முக்கியத்தொழில் வேளாண்மை 2-வதாக நெசவுத்தொழில்
- குஜராத், வங்காளம் போன்ற பகுதிகளில் தரமான துணிகள் தயாரிக்கப்பட்டன.
- **<u>கட்டிடக்கலை</u>**

**<u>மம்லுக் (அ) அடிமை வம்சம்</u>**

1.குவ்வாதுல் இஸ்லாம் மசூதி 2.குதுப்மினார் 3.நாசிர் உத் தின் முகமது கல்லரை 4 பால்பனின் சமாதி 5.டெல்லி தாய்டின்க ஜோன்பரா மசூதி

**<u>கில்ஜி வம்சம்</u>**

1.சிரிக்கோட்டை (அ)நகரம் 2.ஹரத் நிஜாமுதின் அவுலியா தர்கா 3. அலைதர்வாசா.

**<u>துக்ளக்</u>**

1.முகமது பின் துக்ளக் கல்லறை 2.அதிலாபாத் கோட்டை 3.துக்ளக்காபாத் 4.ஜஹான்பானா

**<u>மற்றவை</u>**

1. டெல்லி லோடி பூங்கா, மோதி மசூதி, சிக்கந்தர் லோடியின் கல்லறை.

**இலக்கியம்**

- சுல்தான்களின் அவையில் அல்பருணி, அமிஸ்குரு, ஜியாவூதின் பராணி போன்ற பல அறிஞர்கள் இருந்தனர்.
- உருது மொழி இக்காலத்தில் உருவானது.
- அல்பரூனி பாரசீக உருது மொழி பலமை பெற்றிருந்தார்.
- இவர் கஜினி முகமது அவையில் இருந்தார். இவர் சமஸ்கிருத மொழியை கற்றதோடு உபநிடதங்கள் பகவத்கீதை படித்து அதன் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.
- அல்பருணி எழுதிய நூல் தாருக்கி உல் இந்த்.
- பாரசீக கவிஞரான அமிர்குஸ்ரு 4,00,000 ஈரடிச் செய்யுள்களை எழுதியுள்ளார். இவர் சிறந்த பாடகராதலால் 'இந்தியக்கிளி' என வர்ணிக்கப்பட்டார். தனது கவிதை நூலில் நிறைய இந்தி சொற்களை பயன்படுத்தியுள்ளார்.

**வீழ்ச்சி**

- துக்ளக் மரபினரின் ஆட்சியின் போதே டெல்லி சுல்தான் ஆட்சியின் வீழ்ச்சி துவங்கிவிட்டது.
- தைமூர் படையெடுப்பு (1398) மற்றும் பாபர் படையெடுப்பு 1526 **ஆகியவை டெல்லி சுல்தானிய வீழ்ச்சிக்கு** காரணமாயின.

# 6.விஜய நகர பாமினி பேரரசு

- முகமது பின் துக்ளக் ஆட்சிக்கு பின் பல மாகாண ஆளுநர்கள் டெல்லி ஆட்சியிலிருந்து விடுபட்டனர்.
- முதலில் வங்காளம் மற்றும் முல்தான் வெளியேறின. தென்இந்தியாவில் பாமினி பேரரசும், விஜய நகர பேரரசும் எழுச்சி பெற்றன.

**விஜயநகர பேரரசு (1336-1672)**

- விஜய பேரரசு 1336இல் **ஹரிஹரர்**, புக்கர் சகோதரர்களால் அவரது ஆசிரியர் '**துறவி வித்யாரண்யர்**' மற்றும் அவரது சகோதரர் '**சாய்னா**'ஆகியோர் உதவியுடன் துங்கபத்ரா ஆற்றங்கரையில் தோற்றுவிக்கப்பட்டது.
- இதன் தலைநகர் **ஹம்பி**.
- ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரபல்லாளனிடம் **ஹரிஹரர்**, புக்கர் பணிபுரிந்தனர்.
- இதில் 4 பேரரசுகள் இருந்தன.
- 1.சங்கம வம்சம்(1336-1485) முதல் அரசர் (**ஹரிஹரர்**, புக்கர் **முதல்** விருபாக்ஷர் வரை)
- 2.சாளுவ வம்சம் (1485-1506)- சாளுவ நரசிம்மர் **முதல்** இம்மடி நரசிம்மர் வரை
- 3.துளுவ வம்சம் (1506-1507)- வீர நரசிம்மர் **முதல்** சதாசிவராயர் வரை (புகழ்பெற்ற விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் இம்மரபை சேர்ந்தவர்.)
- 4.ஆரவீடு வம்சம் (1570-1614)- திருமலை **முதல்** வேங்கடர் வரை.
- சங்கம வம்சத்து **ஹரிஹரர்** 1336இல் ஆட்சிக்கு வந்தார். இவர் கைப்பற்றிய இடங்கள் முதலில் மைசூர் பின் மதுரை
- முதலாம் புக்கர் 1356இல் அரியணை ஏறினார். இவர் ஆட்சியின்போது அரசு துங்கபத்ரா முதல் இராமேஸ்வரம் வரை விரிவடைந்தது.
- விஜயநகர மன்னர்களில் முக்கியமானவர்கள் இரண்டாம் **ஹரிஹரர்**, முதலாம் தேவராயர், இரண்டாம் தேவராயர், கிருஷ்ணதேவராயர்.

**கிருஷ்ணதேவராயர்(கி.பி1509-1529)**

- விஜயநகர பேரரசின் மிக சிறந்த அரசர், இவரை '**முழு நிறைவான அரசர்**' என வரலாற்று அறிஞர் 'டோமினிக் பயஸ்' குறிப்பிட்டு உள்ளார்.
- 1510-இல் சிவசமுத்திரம், 1512-இல் ரெய்ச்சூர், 1523-இல் வராங்கள், ஒரிஸா மற்றும் தக்காணம் பகுதிகளை இவர் வென்றார்.
- இவர் பேரரசு வடக்கே கிருஷ்ணா, தெற்கே காவிரி, மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்கக்கடல் வரை பரவியிருந்தது.
- போர்ச்சுக்கீசிய அரேபிய வணிகக் குழுவினரை நட்புறவோடு நடத்தினார்.
- 'அஸ்டதிக்கஜங்கள்' என்னும் எட்டு அறிஞர்களை இவர் அவையில் இருந்தனர்.
- **அஸ்டதிக்கஜஙகள்**
- 1.அல்லசானி பெத்தனை 2.நந்தி திம்மன்னா 3. தேனாலி இராமன் 4.பட்டு மூர்த்தி 5.புனவீரபத்திரன் 6.தூர்ஜதி 7.மல்லண்ணர் 8.பனாஜி சூரானா.

***தலைக்கோட்டைப்போர் (1565)***

- விஜயநகர பேரரசை முடிவுக்கு கொண்டு வந்த போர்
- இப்போரின்போது மன்னராக இருந்தவர் சதாசிவராயர்.
- சுதாசிவராயரின் அமைச்சர் இராமராயரே இப்போரினை நடத்தினார்.
- இப்போரில் பாமினி அரசுகளான 1.அகமது நகர் 2.பீஜப்பூர் 3.கொல்கொண்டா 4.பீடார் ஆகிய 4 முஸ்லீம் பேரரசுகள் விஜயநகர பேரரசை தலைக்கோட்டை போரில் தோற்கடித்தன. இராமராயர் போரில் கொல்லப்பட்டார்.

**அரசு**

- பேரரசு ஆறு மாகாணங்களாக பிரிக்கப்பட்டது. மாகாணங்களின் ஆளுநர் 'நாயக்' எனப்பட்டார்.
- 'கிராமசபை' கிராமங்களை நிர்வகித்தது. அச்சபையில் தலைமுறை வழிவந்த கணக்காளர், ஏடையாளர், காவல்காரர், குறறேவலர் ஆகியோர் இடம் பெற்றனர்.
- கிராம நிர்வாகத்தை கண்காணித்தவர் '**மகா நாயக்கரச்சாரியார்**' எனப்பட்ட அதிகாரியாவார்.
- படைப்பிரிவில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படைகள் இருந்தன.
- மன்னரே நாட்டின் தலைமை நீதிபதி ஆவார். இந்து நெறிமுறைப்படி குற்றங்கள் விசாரிக்கப்பட்டன.
- ஆயுதமேந்துதல், மல்யுத்தம் போன்ற தற்காப்பு கலைகளில் பெண்கள் சிறந்து விளங்கினர்.
- 'நியுனஸ்'என்ற அயல்நாட்டு பயணி தனது குறிப்புகளில் பெண்களில் பெண் ஜோதிடர் எழுத்தர், கணக்காளர், காவலர், மல்யுத்த வீராங்கனைகள் ஆகியோர் அரசவையில் இடம்பெற்றிருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.
- மலேசியா, பர்மா, சீனா,அரேபியா. பாரசீகம் தென்னாப்பிரிக்கா, அபிசீனியா, போர்ச்சுக்கல் நாடுகளோடு வாணிக தொடர்பு வைத்து இருந்தனர்.
- வெளிநாட்டு கப்பல் போக்குவரத்து கோவா, டையூ, கொல்லம், கொச்சி போன்ற துறைமுகம் வாயிலாக நடைபெற்றது.
- வாசனைப்பொருட்கள், தானியங்கள், பட்டு, பருத்தி, அபின், சாயப்பொருட்கள், முத்து, குங்குமப்பூ, இஞ்சி, சர்க்கரை,தேங்காய் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.
- முக்கிய இறக்குமதி பொருட்கள் குதிரைகள், பாதரசம், சீனப்பட்டு, வெல்வெட்டு துணிகள் ஆகியவையாகும்.

**கோயில்கள்**

- 1. ஹசாரே இராமசாமி கோயில் 2.விட்டலசாமி கோயில் (கிருஷ்ண தேவராயர் கட்டியவை)
- ஆதரவு பெற்ற மொழிகள், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம்
- **இலக்கியம்**
- 1.கிருஷ்ண தேவராயர் எழுதிய தெலுங்கு நூலான 'அமுக்த மால்யதா' மற்றும் வடமொழி நூல்களான உஷாபரிநயம், ஜாம்பாவதி கல்யாணம் முக்கியமானவை.
- பேரரசு வீழ்ச்சி
- பேரரசை இறுதியாக ஆண்ட வம்சம் 'ஆரவீடு வம்சம்' ஆகும். 1614ல் இம்மரபு வீழ்ச்சியடைந்தது. நாயக்கர்கள், பீஜப்பூர், கொல்கொண்டா அரசுகள் விஜயநகர பேரரசின் பகுதிகளை பறித்து கொண்டனர்.
- **பாமினி அரசு** (1347 - 1526)
- பாமினி அரசை 1327இல் 'ஹசன் கங்கு பாமினி' என்பவர் நிறுவினார். இவர் தேவகிரியை சேர்ந்த துருக்கிய அலுவலர்.
- இவர் மாகூர் முதல் தெலுங்கானா வரையிலான பகுதிகளையும் வாரங்கல், கொல்லாப்பூர், கோவா, மாண்டு, மாளவம் ஆகிய இடங்களை வென்றார்.
- பாமினி பேரரசின் தலைநகர் 'குல்பர்கா'
- **முக்கிய அரசர்கள்**
- முதலாம் முகமதுஷh (1358-1377)_விஜயநகர மன்னர் முதலாம் புக்கர் மற்றும் வராங்கல் கபயா நாயக்கரையும் வென்றார்.
- இரண்டாம் முகமது ஷா (1378-1397) மசூதிகள், மதரஸாக்கள் பல கட்டியதோடு அண்டை நாடுகளுடன் நடபுடன் இருந்தார்.
- பெரோஸ் ஷா பாமினி (1397-1422) சிறந்த போர் வீரர், விஜயநகர மன்னர் முதலாம் தேவராயர் என்பவரை தோற்கடித்தார். இவரது நிர்வாகத்தில் இந்துக்களுக்கு இடமளித்தார். இறுதியில் விஜயநகர அரசால் தோற்கடிக்கப்பட்டார்.
 அகமது ஷா(1422-1435) கொடுங்கோலர் இரக்கமற்றவர் தனது தலைநகரை குல்பர்காவிலிருந்து பீடாருக்கு மாற்றினார்.

**மூன்றாம் முகமது ஷா(1463-1482)**

- 9 வயதில் பட்டமேற்றார் இவருக்கு 'முகமது கவான்' என்பவர் பாதுகாவலராக இருந்தார். முகமது கவானால் கொங்கு நாடு, சங்கமேஸ்வர், ஒரிஸ்ஸா, விஜயநகர் பகுதிகள் கைப்பற்றப்பட்டன.
- தக்காண முஸ்லிம்களின், முகமது கவான் மீதான பொய்யான குற்றச்சாட்டை அதை நம்பிய மூன்றாம் முகமது ஷா அவருக்கு மரண தண்டனை அளித்தார்.
- 1481இல் முகமது கவான் கொல்லப்பட்டதும் 1482ல் மூன்றாம் முகமது ஷாவும் கொல்லப்பட்டார். அவருக்கு பின் பாமினி பேரரசு பீஜப்பூர், அகமது நகர், பீரார், பீடார் கொல்கொண்டா என 5 ஆக சிதறுண்டது.
- பாமினி அரசு 'தரா∴புகள்' என்னும் மாநிலங்களாக பிரிக்கப்பட்டு இருந்தது.அதன் ஆளுநர் தரா∴புதார்.
- அரபு, பாரசீகம் கற்க வழிவகை செய்யப்பட்டது. குல்பர்கா, கொல்கொண்டா, ஜிம்மா மசூதி, கோல்கும்பாஸ் கட்டிடம் ஆகியவை இவர்களுடையது.
- பீஜப்பூரில் உள்ள 'கோல்கும்பா கட்டிடம்' 'முனுமுனுக்கும் அரங்கம்' என சிறப்பிக்கப்படுகிறது.

# 7.பக்தி, சூ.ஃபி இயக்கங்கள்

- பக்தி இயக்கம் முதலில் தென்னிந்தியாவில் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தை 'இராமானந்தர்' வடஇந்தியாவுக்கு கொண்டுபோய் சேர்த்தார்.
- 63 நாயன்மார்களில் முதன்மையானவர்கள் திருநாவுக்கரசர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆவர்.
- திருநாவுக்கரசர் கி.பி.600இல் பிறந்தார். சமணரான இவரை இவர் தமக்கை திலகவதி சிவபக்தனாக மாற்றினார்.
- இவர் எழுதிய 49,000 பதிகங்களில் 311 மட்டுமே கிடைத்துள்ளன.
- ஓரே கடவுள் எனும் கோட்பாட்டை வழியுறுத்திய மாணிக்கவாசகர் '**கடவுளை அடைய ஒரே வழி அன்பு மட்டுமே**' எனக்கூறியுள்ளார். இவர் எழுதிய நூல் திருவாசகம்.
- சம்பந்தர் 16,000 பதிகங்களை பாடினார், 384 மட்டுமே கிடைத்துள்ளன.
- எட்டாவது நூற்றாண்டில் தென்னாற்காடு மாவட்டத்தில் பிறந்தவர் சுந்தரமூர்த்தி இவர் 38,000 பதிகங்களை பாடினார். இதில் 100 மட்டுமே கிடைத்துள்ளன.
- நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம், தேவாரம். திருவாசகம், திருமுறை ஆகிய நூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டவை.

**<u>ஆழ்வார்கள்</u>**

- விஷ்ணுவின் **மீது** பாடிய சுமார் 4000 பாடல்களை நாதமுனி என்பார் **நாலாயிரத் திவ்யபிரபந்தம்** என்னும் நூலாகத் தொகுத்துள்ளார்.

**<u>பக்தி இயக்க வரலாறு</u>**

- பக்தி இயக்கத்தை தென்னிந்தியாவில் தொடங்கி வைத்தவர். சங்கராச்சாரியார். இவர் கேரளாவில் காலடி என்ற இடத்தில் பிறந்தார். இவருடைய கொள்கை 'அத்வைதக் கொள்கை' ஆகும்.
- சங்கராச்சாரியார் 'பிரம்மம்' என்ற தலையாய சக்தியே உண்மை என உறைத்தார்.
- இராமாணுஜர் பக்தி இயக்கத்தின் முக்கியமானவராக திகழ்பவர் இவர். கி.பி.12ம் நூற்றாண்டில் ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தார். இவர் வைணவ பெரியார் ஆவார்.
- இராமானந்தர் இராமானுஜரின் சீடர் கடவுள் நம்பிக்கையை பெரிதும் போற்றினார். மக்கள் பேசும் மொழியிலேயே இவர் போதனை செய்தார்.
- வல்வபாச்சாரியார் கிருஷ்ணரை வழிபட்டார் மக்கள் பக்தியின் மூலம் இறைவனை அடையலாம் என போதித்தார்.
- **பசவர்** 'வீர சைவம்' எனும் பிரிவை தொடங்கினார். இவரை பின்பற்றியோர் 'வீரசைவர்' அல்லது லிங்காயத்துகள்' எனப்பட்டனர்.
- **சைதன்**யர் 1485ல் வங்காளத்தில் பிறந்தார், கிருஷ்ண வழிபாட்டை பிரபலப்படுத்தினார். அன்பும் பக்தியும் இறைவனை அடைய வழி என்றார்.
- **கபீர்** இராமனந்தரின் சீடர், இந்து முஸ்லிம் ஒற்றுமையை முதன்முதலாக வழியுறுத்தியவர், இவரின் சீடர்கள் '**கபீர் பந்த்**' எனப்பட்டனர். இவரது போதனைகளின் தொகுப்பு '**பிஜகா**' எனப்படுகிறது. இவரது பாடல்கள் '**தோகா**' வகைப்பாடல்கள்.
- இராமானுஜம், ரகீமும் ஒருவரே என்றும் இவர் கூறினார். சிலை வழிபாடு மற்றும் சாதிமுறைளை இவர் சாடினார்.
- குருநானக் (கி.பி.1469-1538) இவர் சீக்கிய மதத்தை நிறுவியவர் கபீரின் சீடர், தால்வண்டி எனுமிடத்தில் 1469ல் பிறந்தார்.
- **<u>மீராபாய்,</u>** மேவார் நாட்டு மன்னர் ரதோர் ரத்னா சிங் மகளும் உதயப்பூர் மன்னரின் மனைவியும் ஆவார். 1498ல் பிறந்தார். இவர் கிருஷ்ண பக்தை, பஜன் என்னும் இவரின் பாடல்கள் இராஜஸ்தான் பகுதியில் பிரபலம்.
- ஞானதேவர், நாமதேவர், ஏக்நாத், துக்காராம், துளசிதாசர், ராமதாசர் ஆகியோர் மகாராட்டிர துறவிகள்.
- ஞானதேவர் பகவத் கீதைக்கு உரை எழுதிய நூல் 'ஞானேஸ்வரி' எனப்படுகிறது.
- குருராமதாசர் '**தசபோதா**' என்ற நூலையும், துளசிதாசர் '**இராமசரிதமானஸ்**' என்ற நூலையும் எழுதியுள்ளனர்.
- 'சொக்கமேளா' என்பவர் தாழ்த்தப்பட்ட இன துறவி ஆவார்.

**<u>சூ.ஃபி இயக்கம்</u>**

- சூ.ப் என்றால் முரட்டு கம்பளி ஆடையை அணிந்த எளிமையான துறவி என்று பொருள்.
- பாரசீகத்தில் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் 12ம் நூற்றாண்டில் இந்தியாவில் பரவியது.
- இவ்வியக்கம் முஸ்லிம் மதத் தலைவர் கலி.ஃபாவின் போக்கை கண்டித்தது. முகமது நபியே உண்மையானவர் என்றும் கூறியது.
- சூ.ஃபிகளின் குழுத்தலைவர் (அ) ஆசிரியர் அரபி மொழியில் 'ஷேக்' என்றும் பாரசீக மொழியில் பீர் (அ) முர்ஷித் என்றும் அழைக்கப்பட்டனர்.
- 12 'சில்சிலா' என்றால் 'தொகுப்புகளாக சு.ஃபி குழுக்கள் பிரிக்கப்பட்டிருந்தன.
- 'சில்சிலா' என்ற தொடர் சங்கிலி என்று பொருள்.
- **<u>இந்திய சூ.ஃபி இயக்கத்தலைவர்கள்</u>**
- **<u>குவாஜா மொய்ன் உத்-தீன் -சிஸ்டி</u>** 1192ல் அஜ்மீர் வருகை புரிந்தார். இவர் ஏழைகளின் காப்பாளர் என்ற பொருள்படும் '**கரிப் நவாஜ்**' என்றழைக்கப்பட்டார்.

**<u>பாபா பரித்</u>** சிஸ்டியின் சீடர் பஞ்சாபி மொழியில் பல பாடல்களை எழுதியுள்ளார். டெல்லி சுல்தான் 'பால்பன்' பாபா பரித்தின் பக்தர் ஆவார்.

**<u>நிஜாம் உத் தீன் அவுலியா</u>** படாயின் என்ற பகுதியிலிருந்து இந்தியா வந்தவர் பாபா.ஃபிரிதின் சீடர் 'மெஹபூம் இ-இலாஹி என்று இவரை அழைத்தனர். அதற்கு கடவுளின் அன்பை பெற்றவர் என்று பொருள்.

**<u>நாகூர் ஆண்டவர்</u>** 16ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் 'மீரான் சாகிப்' என்றும் குவாதிர் வாலி என்றும் அழைக்கப்பட்டார். நாகூரில் இவரது கல்லறை உள்ளது. இங்கு கந்தூரி உருஸ் என்னும் விழா நடைபெறுகிறது.

**<u>விளைவுகள்</u>**

இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டது. வட்டார மொழி இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தது.

## குடிமையியல்

## 1.நம் நாடு

- இந்தியாவின் நில அளவு 32,87,263 சதுர கிலோமீட்டர் பரப்பளவு.
- உலகின் 7வது பெரய நாடு
- மக்கள்தொகையில் சீனாவுக்கு அடுத்து 2-வது இடம்
- தொழில் துறையில் 10-வது இடம்
- விண்வெளி ஆய்வில் 6-வது இடம்
- **இருப்பிடம்**
- வடக்கே இமயமலை, தெற்கே இந்தியப்பெருங்கடல்,கிழக்கே வங்காள விரிகுடா, மேற்கே அரபிக்கடல்
- நில எல்லையின் நீளம் - 15,200 கி.மீ.
- கடற்கரையின் நீளம் - 7,516.6 கி.மீ.
- அட்ச தீர்க பரவல் 8° 4' முதல் 37° 6' வட அட்சக்கோட்டிற்கும் இடையிலும், 68° 7' முதல் 97° 25' வரை கிழக்கு தீர்க்க கோட்டிற்கு இடையேயும் இடப்பெற்றுள்ளது.
- வடக்கு தெற்காக இந்தியாவின் நீளம் - 3214 Km
- கிழக்கு மேற்காக இந்தியாவின் நீளம் - 2,933 Km.
- **மக்கள்தொகை** 2011 ன் படி 1210.2 **மில்லியன்**, ஆண்கள் 623.7 மில்லியன், பெண்கள் 586.5 மில்லியன்
- மக்கள்தொகை அடர்த்தி 382 பேர்
- கல்வியறிவு - 74.04%. ஆண்கள் - 82.14%, பெண்கள் - 65.46%
- இந்தியாவின் உலகின் மிகபெரிய நாடு, இது 1950 ஜனவரி 26இல் குடியரசானது.
- இந்திய அரசியல் அமைப்பு உலகின் நீண்ட எழுதப்பட்ட அரசியல் அமைப்பு ஆகும்.
- இந்தியா 28 மாநிலங்களையும், 7 யூனியன் பிரதேசங்களையும் கொண்டது. டெல்லி இந்தியாவின் தேசிய தலைநகர் ஆகும்.

**மத்திய அரசு நிர்வாகம்**

- இவ்வரசில் குடியரசுத்தலைவர், துணைக்குடியரசுத்தலைவர், பிரதம அமைச்சர், மத்திய அமைச்சர்குழு மற்றும் தலைமை சட்டத்தலைவர் (அட்டர்னி ஜெனரல்) ஆகியோர் உள்ளனர்.
- குடியரசுத்தலைவர் இந்திய நாட்டின் தலைவர், இவரே நம் முப்படைகளின் தளபதியும் ஆவார். இந்தியாவின் முதல் குடிமகனும் இவரேயாவார்.
- 35 வயது நிரமபியவராக இருக்கும் இந்திய குடிமகன் எவரும் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடலாம். இவர் மறைமுக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஏறக்குறைய மையஅரசின் அதிகாரிகள் அனைவரையும் இவரே நியமனம் செய்கிறார்.
- பிரதமர்
- நாட்டின் உண்மையான அதிகாரங்கள் அனைத்தும் பிரதம அமைச்சரிடமே இருக்கிறது.
- தேர்தலில் வெற்றிபெற்ற பெரும்பான்மைமிக்க கட்சியின் உறுப்பினர்களால் இவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

**நாடாளுமன்றம்**

- இரு அவைகள் உள்ளன. அவை
- 1.லோக் சபா (மக்களவை) 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை இதன் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் மொத்த உறுப்பினர்கள் 545 ஆகும். (2 உறுப்பினர்கள் ஆங்கிலோஇந்தியன் நியமன உறுப்பினர்கள்) உறுப்பினர் பதவிகாலம் 5 ஆண்டுகள்.
- 2. இராஜ்ய சபா (மாநிலங்களவை)
- இது ஒரு நிரந்தர அவை இது மேலவை என வழங்கப்படுகிறது. இதன் உறுப்பினர்கள் மாநில MLA -க்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் மொத்த உறுப்பினர்கள்(238+12) 250. இதில் 12 உறுப்பினர்கள் கலை, இலக்கியம் சம்பந்தப்பட்ட நபர்கள் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

**மாநில அரசு**

- மாநில அரசின் நிர்வாகத்தில் ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர் குழு, சட்டத்துறைதலைவர் ஆகியோர் உள்ளனர்.
- ஆளுநர் மாநிலத்தின் நிர்வாக தலைவர், இவரை குடியரசுத்தலைவர் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமனம் செய்கிறார். மாநிலத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநரேயாவார்.
- 35 வயதுக்கு மேற்பட்ட எவரும் ஆளுநராக நியமிக்கப்படலாம்.
- மாநிலத்தின் உண்மையான அனைத்து அதிகாரமும் முதலமைச்சரிடம் இருக்கும்.

**மாநில சட்டமன்றம்**

- ஆந்திரா, பீகார், ஜம்மு காஷ்மீர், கர்நாடகம், மகாராஷ்டிரா, மற்றும் உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஈரவை சட்டமன்றம் உள்ளது. மற்ற எல்லா மாநிலங்களிலும் ஓரவை சட்டமன்றம் உள்ளது.
- ஈரவை சட்டமன்றத்தில் சட்டமன்ற மேலவை (MLC), சட்டமன்ற பேரவை (MLA) அல்லது கீழவை இரண்டு அவைகள் இருக்கும்.

**நீதித்துறை**

- அடிப்படை உரிமைகளின் காவலன் எனப்படுவது உச்ச நீதிமன்றமே ஆகும். இது ஒரு சுதந்திரமான அமைப்பாகும்.
- உச்சநீதிமன்றம் இந்தியாவின் தலைமை நீதிமன்றம் ஆகும். இதில் தற்போது தலைமை நீதிபதி உட்பட 31 நீதிபதிகள் உள்ளனர்.
- மாநிலங்களில் தனைமை நீதிமன்றம் 'உயர்நீதிமன்றம்' ஆகும். இந்தியாவில் 21 உயர்நீதிமன்றங்கள் உள்ளன. அவற்றுள் மூன்று நீதிமன்றங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவாக உள்ளன.

## இந்திய தேசிய சின்னங்கள்

- 1.**தேசியக்கொடி:** செவ்வக வடிவமைப்பு கொண்டது, மேற்புறம் காவிநிறம் தியாகத்தையும், நடுவில் வெண்மை நிறம் உண்மையையும் கீழே கரும்பச்சை நிறம் செழிப்பையும் குறிப்பிடுகிறது.
- நடுவில் கருநீல நிறத்தில் அமைந்துள்ள அசோக சக்கரம் அறவழியில் முன்னேறி சென்று அமைதியையும், செழுமையையும் பெற்றுத்தர தூண்டுகிறது.
- இதில் 24 ஆரங்கள் உள்ளன.
- நமது தேசிய கொடியின் நீள அகலம் 3:2 ஆக இருக்க வேண்டும்.
- நமது தேசியக்கொடி ஜூலை 22- 1947-ம் ஆண்டு அங்கிகரிக்கப்பட்டது. ஆகஸ்டு 15 1947ஆம் ஆண்டு நமது தேசியகொடி முறையாக ஏற்றப்பட்டது.

**கொடியைப்பற்றிய விதிமுறைகள்**

- 1.நமது கொடியை விட வேறு நாட்டு கொடி உயரமாக பறக்கக்கூடாது.
- 2.கம்பத்தின் உச்சிவரை கொடி உயர்ந்திருக்க வேண்டும்.
- 3.சூரியன் மறையும் முன் கொடியை இறக்கிவிட வேண்டும்.
- 4.தேசிய தலைவர்கள், நட்பு நாட்டு தலைவர்கள் இறப்பின்போது தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிட வேண்டும்.
- 5.கொடியை ஏற்றும்போது நாம் நேராக நிற்க வேண்டும்.

**தேசிய கீதம்**

- தேசிய கீதத்தை இயற்றியவர் **ரவீந்தரநாத் தாகூர்** வங்க மொழியில் 5 பத்திகள் கொண்ட பாடல் தொகுப்பில் முதல் பத்தி மட்டும் நமது தேசிய கீதமாக உள்ளது.
- 1950 ஜனவரி 24 ஆம் நாள் நமது தேசிய கீதம் அரசியல் நிர்ணயம் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1911 ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் நாள் கல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இப்பாடல் முதன்முறையாக பாடப்பட்டது.
- தேசிய கீதத்தை பாடும் கால நேரம் 52 **விநாடிகள்**

**தேசியச்சின்னம்**

- அசோகரின் சாரநாத் தூணில் உள்ள சிங்கங்களின் உருவம். இது 1950 ஜனவரி 26 ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இதில் நான்கு சிங்கங்கள், கீழ் பகுதியில் குதிரை, வளப்புறம் காளை நடுவில் சக்கரம் இடம் பெற்றுள்ளது.
- குதிரை ஆற்றல் மற்றும் வேகத்தையும், காளை கடின உழைப்பையும் உறுதியையும், சக்கரம் தர்மத்தையும், அறவழியையும் குறிக்கிறது.
- இதன்கீழே '**சத்யமேவஜெயதே**' என்னும் தேவநாகரி மொழி வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் பொருள் 'வாய்மையே வெல்லும்' என்பதாகும்.

**தேசியப்பாடல்**

- 1.'**வந்தே மாதரம்**' என்னும் நமது தேசிய பாடல் சமஸ்கிருத மொழியில் கவிஞர் **பக்கிம் சந்திர சட்டர்ஜி** என்னும் கவிஞரால் இயற்றப்பட்டது.
- இப்பாடல் **'ஆனந்த மடம்'** என்னும் நூலில் 1882இல் வெளியிடப்பட்டது.
- 1896இல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் முதன்முதலாக பாடப்பட்டது. இப்பாடலை முதன்முறையாக ரவீந்தரநாத் தாகூர்.

**தேசிய விலங்கு**

- தேசிய விலங்கு - முதலில் இருந்தது '**சிங்கம்**' தற்போது தேசிய விலங்காக **புலி** ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- தேசிய பறவை - **மயில்**
- தேசிய மலர்- தாமரை இதன் இதழ்கள் ஒன்று சேர்ந்திருப்பது ஒற்றுமையைக் குறிக்கிறது.
- தேசியமரம் - ஆலமரம்
- தேசிய பழம் - மா
- தேசிய விளையாட்டு- **ஹாக்கி**
- தேசிய ஆறு - கங்கை
- தேசிய நாள்காட்டி - சாகா காலப்பிரிவு